மன்றம்

இரா. நெடுஞ்செழியன், எம்.ஏ.

மலர் 2 | 1 - 1 - 54 | 3

★

அருளுடைய ஆண்டவன்
பெயரால்,

அன்புடைய மதத்தின்
பெயரால்,

உயிருடன் எரிக்கப்பட்ட
உத்தமர்

ஜியார்டனோ புருனோ

★



உள்நாடு அணா 4 ★ மாதமிருமுறை ★ வெளி நாடு

சிபார்சுக்குப் போக—சிபார்சு !

அறிஞர் அண்ணா அவர்கள் படித்து முடித்தவுடன், அவரை அரசாங்க வேலையில் எதிலேனும் அமர்த்தவேண்டும் என்பது அவர் வீட்டாரின் எண்ணம். அண்ணாவின் சிற்றன்னை தொத்தா அவர்கள் அண்ணாவைப் பார்த்து அடிக்கடி அவரைப் போய்ப் பார், இவரைப் போய்ப் பார் என்று சொல்லிக்கொண்டேயிருப்பார்களாம்.

அரசாங்க வேலையில் அமராது பொதுப் பணியிலேயே ஈடுபட்டிருக்கவேண்டும் என்பது அண்ணாவின் எண்ணம். அவ்வப்போது ஏதாவது சாக்குப்போக்குச் சொல்லித் தட்டிக் கழித்துக்கொண்டே வருவது அவரது வழக்கமாயிருந்துவந்தது.

ஒரு தடவை காஞ்சிபுரத்திலுள்ள முக்கியமான ஒருவரிடம் ஒரு சிபார்சுக் கடிதம் பெற்று, சென்னை உயர்நீதி மன்றத்தில் வேலைபார்த்துக்கொண்டிருந்த அதிகாரி ஒருவரைப் போய்ப் பார்க்கும்படி அண்ணா அவர்கள் அனுப்பப்பட்டாராம். அந்த அதிகாரிக்குத் தம்மை அறிமுகப்படுத்திவைப்பதற்காக ஒருவரைக் கூட அழைத்துக்கொண்டு அண்ணா அவர்கள் அவரிடம் சென்றார்களாம்.

“இவர்தான் சி. என். அண்ணாத்துரை. உங்களைப் பார்க்க வந்திருக்கிறார்கள்” என்று அண்ணாவுடன் வந்தவர், அந்த அதிகாரியிடம் அண்ணாவை அறிமுகப்படுத்திவைத்தாராம். அவர் உடனே “உங்களைக் காணவேண்டும் என்று நீண்டநாட்களாக விரும்பியிருந்தேன். நல்லவேளையாக நீங்களே வந்துவிட்டீர்கள். அண்ணாத்துரை ! உங்களிடம் ஒன்று சொல்லவேண்டும் என்று விரும்பினேன். நான் டிஸ்டிரிக்ட் முன்சீப் ஆவதற்கு எல்லாவித தகுதியுடையவனாக இருந்தும், பல வருடங்களாக என்னைத் தேர்ந்தெடுக்காமல், என்னைப் புறக்கணித்து, வேறு யார் யாரையோ தேர்ந்தெடுக்கிறார்கள். நீங்கள் ஏ. இராமசாமி முதலியாருக்கு மிகவும் வேண்டியவர்களாமே! நீங்கள் எப்படியேனும் அவரிடம் சிபார்சு செய்து, என்னை டிஸ்டிரிக்ட் முன்சீப் வேலைக்குத் தேர்ந்தெடுக்கும்படி செய்யவேண்டும்” என்று கேட்டுக் கொண்டாராம்.

அண்ணாவிற்கு என்ன செய்வதென்று தோன்றவில்லையாம். கோட்டுப் பைக்குள் இருந்த சிபார்சுக் கடிதத்தை அப்படியே கையால் கசக்கிக்கொண்டு, “என்னால் முடிந்தவரையில் பார்க்கிறேன். தங்களைச் சும்மா பார்த்துவிட்டுப்போகலாம் என்று வந்தேன். போய் வருகிறேன்” என்று சொல்லிவிட்டு அண்ணா அவர்கள் வந்துவிட்டார்களாம்.

எச்சரிக்கையா ? ஏமாற்றா ?

"தீண்டாமையையும் வறுமையையும் சேர்த்துக் குழப்பிக்கொள்ளக்கூடாது" என்று சென்னை முதலமைச்சர் அன்பர் ஆச்சாரியார், சென்னை சட்ட மன்றத்தில், தாழ்த்தப்பட்டோர் நலவளர்ச்சிப் பிரிவு உதவிநிதிபற்றிய விவாதம் எழுந்தபோது குறிப்பிட்டுள்ளார்.

இந்நாட்டின் மனித சமுதாயத்தில் ஒரு பிரிவினரைத் தீண்டப்படாதார் என்றும், தாழ்த்தப்பட்டோர் என்றும் சொல்லி ஒதுக்கி வைத்து, வாழ்க்கையில் பெறக்கூடிய சிலபல வசதிகளை, அவர்கள் அடையும் உரிமை பெற்றவர்கள் அல்லர் என்ற நியதியையும் ஏற்படுத்திப், பன்னெடும் நூற்றாண்டுகளாக இந்த முறைகளை நடைமுறையில் விடாமல் கடைப்பிடித்து வருவதன் காரணமாக அல்லவா, தாழ்த்தப்பட்டோர் மீளா வறுமையில் கிடந்து உழலும்படி நேரிட்டது என்பதை, ஆச்சாரியார் உணராமலிருக்கமுடியாது. அப்படியிருந்தும், "தீண்டாமையையும் வறுமையையும் சேர்த்துக் குழப்பிக்கொள்ளக்கூடாது" என்று ஆச்சாரியார் கூறுவது, முழுப் பூசணிக்காயை சோற்றில் மறைக்க முயலுகிறார் என்பதையே தெளிவாக்குகிறது.

தாழ்த்தப்பட்டோர் பரம்பரை பரம்பரையினராக வறுமையிலும், ஏழ்மையிலும் கிடந்து உழல்வதற்குத், தீண்டாமையின்பேரால் இழைக்கப்பட்ட கொடுமைகளைத் தவிர, வேறு என்ன நியாயமான சமாதானம் கூறமுடியும்? ஏன் அந்த வகுப்பினர் மட்டும் பரம்பரைபரம்பரையாக ஏழைகளாகவே இருந்துவரவேண்டும்? தீண்டாமையைத் தவிர வேறு என்ன காரணம் காட்டமுடியும்? தீண்டாமைதான், தாழ்த்தப்பட்டோர்க்கு அறிவு இருந்தும், அறிவை வளரவிடாமல் தடுத்தது; அவர்களுக்குப் படிக்க ஆர்வம் இருந்தும், படிப்புச் சொல்லிக்கொடுக்க மறுத்தது; பதவி பெற விருப்பம் இருந்தும், பதவிபெற உரிமையில்லை என்று முட்டுக்கட்டை போட்டது; வாணிகம் நடத்த ஆவல் இருந்தும், உயர்வகுப்பினரோடு வாணிகம் நடத்துவது குலமுறைக்கு ஆகாது என்று சொல்லிற்று; அவர்கள் வெள்ளைவேட்டி கட்டிக்கொள்ளுதல், செருப்பு போட்டுக்கொள்ளுதல், குடை பிடித்துக்கொள்ளுதல், ஓட்டு வீட்டில் வாழ்தல், வண்டியில் ஏறிச்செல்லுதல் அடுக்காது என்று கூறிற்று! தீண்டாமை முழுக்க முழுக்க ஆட்சிசெலுத்திய நாட்கள் வரை இத்தகைய கொடுமைகள் இந்த நாட்டில் நிலைத்திருக்கத்தானே செய்தன. தீண்டாமையை ஒழிக்கும் முயற்சி சீர்திருத்தப் பிரசாரத்தாலும், வகுப்புவாரி உரிமைச் சட்டத்தாலும், தீண்டாமை ஒழிப்புச் சட்டத்தாலும் ஓரளவுக்கு நிறைவேறத் தொடங்கியபிறகுதான், தாழ்த்தப்பட்டோரில் மிகமிகச் சிலரின் வாழ்க்கையாவது சிறிது வசதியுடையதாக மாறத்தொடங்கிற்று. தீண்டாமை நிலவிய அளவுக்கு, வறுமை தாழ்த்தப்பட்டோரைத் தாக்கிற்று என்பதும், தீண்டாமை நீக்கப்பட்ட நிலையில்தான், ஒருசிலரின் வாழ்க்கை வளமுறத் தொடங்கிற்று என்பதும் இக்காலத்திய நடவடிக்கைகளில் கண்கூடாகக் காணலாம்.

தீண்டாமையை ஒழிப்பது, வறுமையைப் போக்குவதற்குக் காரணமாக அமையாதைப்

கொடுக்காமல், தாம் செய்த முடிவையே ஏற்றுக்கொள்ளவேண்டும் என்று வற்புறுத்துவது, பண்டித நேருவின் ஆணவத்தைத் தெளிவாக்குகிறது. இதற்குப் பரிகாரம், நேருவுக்கு அடங்கியிருந்து கெஞ்சிக் கேட்டு நிற்பது அல்ல, நேருவின் ஆட்சியினின்றும், அதாவது வடநாட்டு ஆட்சியினின்றும், தமிழகத்தை—திராவிடத்தைப் பிரித்துக்கொள்ளும் நீண்டகாலப் போராட்டத்தில் மிக்கக் கவனம் செலுத்துவதுதான்.

சித்தூர்த் தமிழ்ப்பகுதிகளைச் சென்னை மாநிலத்தில் அதாவது தமிழகத்தில் இணைக்கும் பிரச்சினையைத், திராவிட முன்னேற்றக்கழகம், தம் சொந்தக் கட்சிப் பிரச்சினையாக ஆக்க விரும்பாமல், தமிழர்களின் ஒருமித்தப் பொதுப் பிரச்சினையாக வைத்து, அதற்கு உறுதுணை புரியவே விரும்புகிறது. நேருவின் ஆணவ முடிவுக்கு உலைவைக்க, தமிழர்கள் முனைவார்களாக!

Library's copy lacks p. 5-6

கொடுமையின் கூடாரம்

ரோமன் கத்தோலிக்க சர்ச், ஐரோப்பா வெங்கும் ஆதிக்கம் செலுத்திவந்த இடைக் காலங்களில், தன்னுடைய கொள்கைக் கோட்பாடுகளை எதிர்ப்பவர்களை விசாரித்துத் தண்டிப்பதற்காக, மதவிசாரணைக்குழு என்ற அமைப்பை, ஐரோப்பாவின் பல பகுதிகளிலும் நிறுவிற்று. அந்தக்குழுவில் கத்தோலிக்க வெறிபிடித்த குருமார்களை இடம்பெற்றிருந்தனர்.

பைபிளைச் சொந்த மொழியில் எவனாவது மொழிபெயர்க்கிறானா? குற்றவாளி! பைபிளிலுள்ள கருத்துகளையும், நிகழ்ச்சிகளையும் பற்றி ஏன், எப்படி என்று கேள்விகள் கேட்கிறானா? குற்றவாளி! புனித வேதநூலின் கருததுக்கு மாறாகக், கதிரவன் தானே சுழன்றுகொண்டு நின்ற இடத்திலேயே நிற்கிறான், உலகம் அவனைச் சுற்றிச்சுழன்றுவருகிறது என்ற அறிவியல் கருத்துக்களை ஆதரிக்கிறானா? குற்றவாளி! கோயிலுக்கு வர மறக்கிறானா? குருமார்க்குக் காணிக்கை செலுத்த மறுக்கிறானா? குற்றவாளி! பைபிளை எழுத்துக்கு எழுத்து ஒப்புக் கொள்ளாமல் தன் அறிவுக்குட்பட்டதைச்

போலவே, தாழ்க்தப்பட்டோரின் வறுமையைப் போக்குவதும், அவர்களின்மீது சுமத்தப்பட்ட தீண்டாமையைப் போக்குவதற்குச் சிறிதளவு உதவிசெய்வதாகும். வெள்ளையர்கள் இந்த நாட்டில் நடமாடத்தொடங்கி, அவர்கள் இந்த நாட்டுத் தீண்டாமையைப் பற்றிப் பொருட்படுத்தாமல், தாழ்த்தப் பட்டோர்க்குப் பதவி கொடுத்தும், படிப்புச்சொல்லிக்கொடுத்தும், வேலைகளில் அமர்த்திக்கொண்டும் நடந்துவரத் தலைப்பட்டதால், அப்படிப்பட்ட வாய்ப்பினைப் பெற்ற தாழ்த்தப்பட்டவர்களிடமிருந்து, தீண்டாமையும் சிறிது விலகிநிற்க ஆரம்பித்தது என்பதையும் நாம் நடைமுறையில் கண்டிருக்கிறோம். எனவே தீண்டாமை நீங்கினால் வறுமை நீங்க வாய்ப்பு ஏற்படுகிறது என்பதையும், வறுமை நீங்கினால் தீண்டாமை நீங்க வாய்ப்பு ஏற்படுகிறது என்பதையும், தீண்டாமை நீடித்தால் வறுமையும் தொடர்ந்து நீடிக்கிறது என்பதையும் நாம் நடைமுறைகளால் தெளிவாக உணருகிறோம். ஆனால், ஆச்சாரியார் மட்டும் இந்த உண்மையை உணர மறுக்கிறார் என்றால், அதற்குப் பொருள், அவர் உண்மையை அறியாதவர் என்பதல்ல, 'சாணக்கிய தந்திரத்தைக்' கையாண்டுபார்க்கிறார் என்பதேயாகும்.

மேலும் அவர் குறிப்பிடும்போது, "எல்லா ஏழைகளும் தீண்டாதவர்களல்ல; எல்லாத் தீண்டாதவர்களும் ஏழைகளல்ல" என்று குறிப்பிடுகிறார். அவருடைய முதல் கருத்து பெருமளவுக்கு உண்மையாக இருக்கக்கூடும்; ஆனால், அவரது இரண்டாவது கருத்து எவ்வளவு தொலைவு உண்மைக்குப் புறம்பானது என்பதைச் சேரியில் வாழும் தாழ்த்தப்பட்டோர்களின் நிலைமையே தெளிவாக்கும். தாழ்த்தப்பட்டோரில் ஆயிரத்தில், பதினாயிரத்தில் ஓரிருவரைத் தவிர, பணம் படைத்தோரைப் பார்க்கவா முடியும்?

அதே சட்டமன்றத்தில், அதேபேச்சில், ஆச்சாரியார் கூறியுள்ள மற்றொரு கூற்றையும் உற்றுக் கவனித்தால், ஆச்சாரியாரின் மனப் பண்பு எப்படிப்பட்டது என்பதை உணர்ந்து கொள்ளலாம். "பிராமணர்களில் ஏழைகள் அநேகம்பேர் இருக்கிறார்கள். கிட்டத்திலுள்ள சில பார்ப்பன பணக்காரர்களைக் கண்டு நீங்கள் ஏமாறவேண்டாம்" என்பதுதான் ஆச்சாரியாரின் அந்த அறிவுரை.

"எல்லாத் தீண்டாதவர்களும் ஏழைகளல்ல' என்ற சொற்றொடரையும், "பிராமணர்களில் ஏழைகள் அநேகம்பேர்கள் இருக்கிறார்கள்" என்ற சொற்றொடரையும் ஒப்பிட்டுப் பார்த்தால், ஆச்சாரியாரின் உள்ளத்தில் நயவஞ்சக நரிப்பண்பு எந்த அளவில் ஒளிந்துகிடக்கின்றது என்பதை உய்த்துணரலாம்.

"ஏமாறவேண்டாம்" என்று தாழ்க்கப்பட்டோர்க்கு அறிவுரை கூறுகிற ஆச்சாரியார், உண்மையில் எச்சரிக்கை செய்கிறாரா அல்லது ஏமாற்றுகிறாரா? அவருடைய கூற்றுக்களை விடைகூறும்!

சொல்கிறுனு? குற்றவாளி! பாதிரியாரிடம் பணிந்துபேச மறுக்கிறுனு? குற்றவாளி! மதத்தின் முறைகளில் சீர்திருத்தம் செய்ய முற்படுகிறுனு? குற்றவாளி! இத்தகைய குற்றவாளிகளுக்கு, மதவிசாரணைக்குழுவினர், 'அன்பு' மதத்தின் பேரால் அளித்த பரிசுகள், சிறைப்படுத்துதல், சித்ரவதை செய்தல், கசையடி கொடுத்தல், கரும்பெனப் பிழிதல், சிரம் அறுத்தல், கரம் ஒடித்தல், வெட்டுக்களத்துக்கு அனுப்புதல், வெந்தழலில் போடுதல்!

கத்தோலிக்க குருமார்களுக்கு எந்தத்துறையில் யார் எதிரியாகக் காணப்பட்டாலும், முதலில், 'கடவுள் நிந்தகன்', 'மதநிந்தகன்', 'நாத்திகன்' என்ற குற்றச்சாட்டுகள் அவர்மீது தூவப்பட்டு, மதவிசாரணைக் குழுவினர் என்ற 'வெறிநாய்களின்' முன்னுல் அவர்கள் கொண்டுவந்து நிறுத்தப்படுவர். பெயர்தான் விசாரணையே ஒழிய, அங்கு விசாரணைக்கு இடமிருப்பதில்லை எப்பொழுதும் தீர்ப்புதான் வழங்கப்படும். 'வெறிநாய்களின்' பிடியிலே அகப்பட்டோர் மீட்சிபெற்றதில்லை!

பொஹிமியாவைச் சேர்ந்த ஜான் ஹஸ் என்பார் போப்பாண்டவரின் போக்கை எதிர்த்தார் என்பதற்காகக் குற்றஞ்சாட்டப்பட்டுத், தீர்ப்பளிக்கப்பட்டு, 1415 ஜுலை 6-ம் நாள் தீயிலிட்டுக் கொளுத்தப்பட்டார்.

ஹஸ்ஸின் கொள்கையைப் பின்பற்றின ஹைரோனிமஸ் என்பவர், கான்ஸ்டன்ஸ் என்ற இடத்தில், 1416 மே 30-ம் நாள், நெருப்புக்குண்டத்தில் இறக்கப்பட்டார்.

பிரேக் என்ற நகரில், ஹஸ்ஸின் கொள்கையை ஆதரித்தார்கள் என்பதற்காக இருபத்து மூன்றுபேர்கள் 1420 மார்ச்சு 14-ம் நாள் வெட்டி வீழ்த்தப்பட்டார்கள். மேலும் நாடோடிகளாகத் திரிந்து, சீர்திருத்தப் பிரசாரம் புரிந்துவந்த பலரும் பிடிக்கப்பட்டுக் கொல்லப்பட்டதோடு, பலரின் வீடுவாசல், காடு கழனி முதலிய சொத்துக்களெல்லாம் பிடுங்கிக்கொள்ளப்பட்டன.

இங்கிலாந்தில் விக்ளிப் என்ற சீர்திருத்தக்காரரின் கருத்துக்களைப் பின்பற்றிய ஜான் பாட்லி என்ற தையல்காரன் நெருப்பிலிட்டுப் பொசுக்கப்பட்டான்.

பிரேஸ்லா என்ற இடத்தில், ஒருவர், தம்மை ஹஸ்ஸின் கொள்கையை ஆதரிப்பவர் என்று வெளிப்படையாகக் கூறிக்கொண்ட காரணத்துக்காக, 1420 மார்ச்சு 15-ம் நாள் உயிரோடு வெந்தழலுக்கு இரையாக்கப்பட்டார்.

ஐந்தாவது மார்ட்டின் என்ற போப், ஹஸ்ஸின் கொள்கையைப் பின்பற்றுபவர்கள், யாராக இருந்தபோதிலும், அவர்கள் எங்கிருந்தாலும் பிடிக்கப்பட்டுக் கொல்லப்படவேண்டும் என்ற கட்டளை ஒன்றினைப் பிறப்பித்தார். அந்தக் கட்டளை மாதாகோவில்தோறும் வாசிக்கப்பட்டது. அதன் காரணமாகப் பலர் சிறைபிடிக்கப்பட்டுப் பின்னர் நெருப்பிலே போட்டுப் பொசுக்கப்பட்டார்கள்.

பதினுயிரக்கணக்கான எடுத்துக்காட்டுகளில் இவை ஒருசிலவாகும்!

மதவிசாரணைக் குழுவிலே மிக வலிவுவாய்ந்ததும், கொடுமைக்கு நிலைக்களனுய் விளங்கியதும் ஸ்பெயினில் நிறுவப்பட்டிருந்த மதவிசாரணைக்குழுவேயாகும். ஸ்பெயின் மதவிசாரணைக் குழுவினர் தீர்ப்பு வழங்கும் மன்றத்தில் ஏசுநாதர் சிலையாகத் தொங்கிக்கொண்டுதான் இருந்தார்! மெழுகுவத்திகள் இரண்டுபக்கத்திலும் எரிந்துகொண்டுதானிருந்தன!

அந்த விசாரணைக்குழுவில் இடம்பெற்றிருந்த டாக்குவேமாடா என்ற மதக்குரு, அந்த விசாரணைக்குழுவில் அங்கம் பெற்றிருந்த காலத்தில் மட்டும், சுமார் 9000-க்குமேற்பட்டவர்கள், மதநிந்தகர்கள் என்றகுற்றஞ் சுமத்தப்பட்டுத், தீயிலேயிட்டுப்பொசுக்கப்பட்டார்கள். ஆண்டவன் பேராலும், அருளே வடிவான ஏசுவின்பேராலும், அன்புமதத்தின்பேராலுமேதான், இந்தச் 'சீரிய' பணிகளைத் திருத்தொண்டர் குழாம் செய்துவந்தது!

கிட்டத்தட்ட பதினைந்தாம் நூற்றுண்டின் ஆரம்பத்தில் துவக்கப்பட்ட மதவிசாரணைக்குழு, 1835-ம் ஆண்டுவரைக்கும் ஆதிக்கம் செலுத்திவந்தது. 1835-ம் ஆண்டில்தான், மதவிசாரணைக் குழுவின் உரிமைகள் பறிக்கப்பட்டன. அந்த மதவிசாரணைக் குழு இன்னும் உயிரோடு இருந்துகொண்டுதான் இருக்கிறது. புத்தகங்களில் காணப்படும் மதநிந்தனை, கடவுள் நிந்தனைபற்றிய கருத்துக்களைப் பொறுக்கி எடுத்துப் போப்பாண்டவரின் பார்வைக்கு வைப்பது அதன் வேலை! மதவிசாரணைக்குழு—'அன்புநெறி' காட்டவந்த மதம் கொண்டிருந்த ஆயுதங்களிலே, முக்கியமான ஒன்று!—கொடுமையின் கூடாரம்!

காரணம் மாறுகிறது—ஆனால் காரியம் மாறவில்லை!

புதிய ஆரம்பக்கல்வித் திட்டத்தைப் புகுத்திய ஆரம்ப நாட்களில், அதைப் புகுத்துவதற்கான காரணங்களை முன்வைக்க வந்த சென்னை முதலமைச்சர் ஆச்சாரியார், "படித்த வண்ணான் வெளுப்பதைவிட படிக்காத வண்ணான் நன்றாக வெளுக்கிறான்", என்றும், "ஏட்டுக் கல்வி தொழிலறிவைப் புறக்கணிக்கிறது, எனவே ஏட்டுக்கல்வி அவ்வளவு அவசியமில்லை" என்றும், "பழைய கல்விமுறை கிராமத்தைப் புறக்கணிக்கச் செய்கிறது. புதிய கல்விமுறை நகரத்தின் மோகத்தைக் குறைத்து. மேல் படிப்பு அவசியமில்லை என்பதை உணர்த்துகிறது" என்றும், "என்னைக் கேட்டால் கல்வியே வேண்டாம் என்பேன். குலத்தொழிலையே கற்றுக்கொண்டால் போதும் என்பேன்" என்றும், "படிப்பு அவசியமில்லை. அக்பர் படித்தானா? ஹைதர் படித்தானா?" என்றும், 'தந்தையின் தொழிலைக் கற்றுக்கொள்வதற்கும், தந்தைக்கு உதவியாக இருப்பதற்காகவுமே, புதிய கல்வித்திட்டம் கொண்டுவரப்பட்டிருக்கிறது" என்றும் கூறினார்.

ஆச்சாரியார் கூறிய காரணங்களைக் கண்டு நாம் திடுக்கிட்டோம்; திகைப்புற்றோம்; நடுக்குற்றோம். எந்தக் குலத்தொழில் முறை வர்ணாச்சிரம வடிவெடுத்து, இந்நாட்டு மக்களை மேலென்றும் கீழென்றும், உயர்வென்றும் தாழ்வென்றும், பிரித்துச், சின்னாபின்னப்படுத்திச் சீரழித்ததோ, அதே குலத்தொழில் முறை, மீண்டும், புதிய கல்வித்திட்டத்தின் மூலம், ஆச்சாரியாரால் கொண்டுவரப்படுகிறது—உயிரூட்டப்படுகிறது என்பதை அறிந்ததும், திராவிட முன்னேற்றக் கழகம் எதிர்த்து நிற்கத் துணிந்தது.

புதிய கல்வித்திட்டத்தின் குலத்தொழில் முறை நோக்கம், ஆபத்தானது என்பதை மட்டுமல்லாமல், ஆறுவயதுக்கும் பதினொரு வயதுக்கும் உட்பட்ட இளம் மாணவர்களின் பருவம் தொழிலைக் கற்றுக்கொள்வதற்கு ஏற்ற பருவம் அல்ல என்பதையும், கல்வியில் சீர்திருத்தம் செய்யப்படவேண்டிய நிலை, செகண்டரிப் பள்ளி, உயர்நிலைப்பள்ளி, கல்லூரி ஆகியவைகளையல்லாது, ஆரம்பப்பள்ளி அல்ல என்பதையும் திராவிட முன்னேற்றக்கழகம் எடுத்துக் காட்டியது, ஏடுகளின் வாயிலாகச், சொற்பொழிவுகளின் மூலமாக; ஆனால் ஆச்சாரியார் செவிகொடுத்தாரில்லை! கண்டனத் தீர்மானங்களை மாநாடுகளிலும், பொதுக்கூட்டங்களிலும் நிறைவேற்றி அனுப்பினோம்; ஆச்சாரியார் கண்ணெடுத்தும் பார்க்கவில்லை! அமைதியான மறியல் மூலம் உணர்த்தினோம்; ஆச்சாரியார் அதிர்ச்சியுண்டார்; அடக்குமுறையைத் துணைக்கழைத்துக்கொண்டார்!

திராவிட முன்னேற்றக் கழகத்தின் நியாயமான எதிர்ப்பு, ஆணவ ஆச்சாரியாரைக் கீழே இறங்கிவரத்தான் செய்துள்ளது. ஆச்சாரியார் இப்பொழுது புதிய கல்வித்திட்டத்தைக் கைவிட மறுக்கிறாரேயொழிய, அதற்கு ஆரம்பத்தில் சொல்லிய காரணங்களையெல்லாம் கைவிட்டுவிட்டு, வேறு காரணங்களைச் சொல்லித் தம் வீம்புத்தன்மையைக் காப்பாற்றிக் கொள்ள முயலுகிறார்.

கல்விப்பிரிவு உதவிநிதிக்கோரிக்கை விவாதம், சட்டமன்றத்தில் நடந்தபோது, ஆச்சாரியார், "திட்டத்தின் லட்சியங்கள் இரண்டு. மேன்மேலும் குழந்தைகள் கல்விகற்கவேண்டும். கற்கும் கல்வி நல்லபடியாக அமையவேண்டும். அந்த நோக்கத்துடனேயே திட்டத்தை வகுத்தேன்" என்று கூறியுள்ளார். ஆரம்பத்தில் அவர் சொல்லிய காரணங்களுக்கும், இப்பொழுது அவர் சொல்லும் காரணங்களுக்கும் எவ்வளவு வேறுபாடு, பாருங்கள்! ஏன் இந்த மாற்றம்? எப்படி ஏற்பட்டது இந்த மாற்றம்? இந்த மாற்றம் ஆச்சாரியாரிடத்தில் ஏற்படும்படி செய்தது திராவிட முன்னேற்றக் கழகத்தின் போராட்டமேதான் என்று கூறினால், அது மிகையாகாது. அந்த அளவுக்குக் கழகத்துக்கு வெற்றிதான்! என்றாலும், இந்தப் புதிய கல்வித்திட்டத்தின்மூலம், ஆச்சாரியார், எந்தச் சமயத்திலும், தம் பழைய காரணங்களுக்கு ஆக்கந் தேடிக்கொண்டுவிடமுடியும்! ஆச்சாரியார் சொல்லும் புதிய காரணங்களையும் நிறைவேற்றிவைக்காத, கவைக்குதவாத, எந்தச் சமயத்திலும் குலத்தொழில் முறையை வற்புறுத்தக்கூடிய புதிய ஆரம்பக்கல்வித்திட்டம் மாறுகிறவரையில் நாட்டில் கிளர்ச்சி ஓயாது! காரணம் மாறுகிறது—ஆனால் காரியம் மாறவில்லை!

கிளியோவின் காதலன்

[இரா. செழியன்]

(முன் இதழ்த் தொடர்ச்சி)

இரண்டு நாட்கள்கழித்து ஒரு நாள் மாலை, நான் படகில் மெதுவாகத் திரும்பி வந்து கொண்டிருந்தேன். முன்பு அந்தப் பைத்தியக் காரனைப் பார்த்த இடம் வந்தது. படகை நிறுத்திக் கரையோரம் பார்த்தேன். அந்த 'ரோம்வீரனை' அங்கு காணவில்லை. முதலில் ஏற்பட்ட பயம் இப்பொழுது எனக்கு இல்லாது போயிற்று. புரியாத ஒன்றின்மீதுதானே பயம் உண்டாகிறது, புரிந்து விட்டால் பயம் தெளிந்துவிடுகிறது. முதலில் முரடன், முன் பின் தெரியாத வேற்றுநாட்டான் என்று நினைத்ததுபோய், 'அவன் ஒரு சித்தம் பிறழ்ந்தவன், சிந்தனை தடுமாறியவன்” என்று தெரிந்ததும் பயம் போய், வேடிக்கை பார்க்கும் உணர்வே வந்தது. பைத்தியக்காரன் என்றால் சுற்றிலும் கூடிநின்று வேடிக்கை பார்ப்பவர்கள் கிடையாதா? அதைப்போல, 'ரோம் நாட்டில்' உலவிக்கொண்டிருக்கும் வீரனைப் பார்ப்பதில் ஒரு வேடிக்கை என்றே கரையில் பார்த்தேன். இரண்டுநாட்கள் முன் பார்த்த இடம்—வெள்ளை மாளிகையின் பின்புறம்—தோட்டம் சரிந்து, தண்ணீருடன் கலந்து நிற்கும் இடம்—அதையும் கடந்துவந்தேன். ஆனாலும் அந்த விசித்திரவீரனைக் காணவில்லை அவன் அரண்மனையில் படைத்தலைவர்களுடன் ஏதாவது போர்த்திட்டங்கள் போட்டுக்கொண்டிருப்பான் என்று தோன்றியது. பைத்தியமாவதிலும் அதிருஷ்டம் இருக்கவேண்டும். தான் ஒரு பிச்சைக்காரன் என்று நினைத்துப் பைத்தியமாவதைவிட, ஒரு அரசன், ஒரு போர்வீரன் என்று பைத்தியமாவது எவ்வளவோ மேலல்லவா! அந்த வகையில் பார்த்தால், அந்த வெள்ளைக் கட்டிடத்திலிருக்கும் சுந்தரமூர்த்திப் பிள்ளையின் மகன் மாசிலாமணி ஒரு “நல்ல” பைத்தியம்தானே!

மெதுவாக நகர்ந்துகொண்டிருந்த படகை வேகமாக ஓட்டிச்செல்ல, நான் முயன்றேன். துடுப்புகளை எவ்வளவு விரைவாக அசைத்தும், படகு மட்டும் நகராமல் இருந்தது. ஏதாவது கொடியில் சிக்கிக்கொண்டு நிற்கிறதோவென்று பின்புறம் பார்த்தேன். அந்த ரோம்வீரன்—ஆண்டனி தண்ணீரிலிருந்து மூழ்கி எழுந்து, படகைப் பிடித்துக்கொண்டு நிற்பதைப் பார்த்தேன். முதலில் அந்தப் பைத்தியத்தைப் பார்ப்பது வேடிக்கை என்று நினைத்துக் கொண்டபோதிலும், அருகில்—நேரில் எதிரே நின்றுகொண்டிருக்கும்பொழுது விவரிக்கமுடியாத பயம் வந்தது. அதற்குள் அவன் படகைத் திருப்பி, அதற்குள் ஏறி உட்கார்ந்துகொண்டு, துடுப்புகளை எடுத்துப் படகை விரைவாகச் செலுத்தினான்.

“யாரோவென்று நினைத்துப் பயந்துவிட்டாயா, கிளியோ!” என்று அவன் கேட்டான். நான் பேசாமல் உட்கார்ந்திருந்தேன். அவன் உட்கார்ந்திருந்த இடத்தைவிட்டு, ஒரு அடி முன்வந்திருந்தால் நான் தண்ணீருக்குள் குதித்துவிட்டிருப்பேன்.

“ஏன் பேசாது இருக்கிறாய், என் அரசியே! என்மீது கோபமா? ஒவ்வொருநாளும், தூதுவர்கள் வரும்போதெல்லாம் நீ வருகிறாய் என்றுதான் நான் அங்கு காத்துக்கொண்டிருப்பேன். அரசி கிளம்பிவிட்டார்கள், இன்று வருவார்கள், நானே வந்துவிடவேண்டும் என்றெல்லாம் ஈனோபரஸ் கூறுவான், ஆனால் நீ மட்டும் வருவதில்லை. கடைசியாக அவர்களிடமிருந்து தப்பி, நான் மட்டும் இங்கு வந்தேன். கிளியோ! நீ ஏன் என்னைப் பார்க்க வரவில்லை? ஏதோ கள்ளக் காதலனைச் சந்தித்திடும் அடிமையைப் போல, மறைந்து திரிந்து வருகிறாய், பயத்துடன் உட்கார்ந்திருக்கிறாய்! ஒன்று ஆண்டனி சித்தம் குழம்பியவனாயிருக்கவேண்டும், அல்லது

கிளியோபாட்ரா மனந்திரும்பியவளாயிருக்க வேண்டும்!'' ஏக்கம் நிறைந்த கண்களுடன் அவர் என்னைப் பார்த்துக்கொண்டிருந்தார். தலையிலிருந்து தண்ணீர் வழிந்துகொண்டிருந்தது. அந்த 'ஆண்டனி'யைப் பார்த்ததும் பரிதாபம் உண்டானது, மறைந்திருக்கும் மாசிலாமணியை நினைத்ததும் வருத்தம் ஏற்பட்டது.

என் பக்கத்திலிருந்த சிறு துண்டை எடுத்துப் போட்டு. ''முகத்தைத் துடைத்துக்கொள்ளுங்கள்! தண்ணீரில் ஏன் மூழ்கிவரவேண்டும்?'' என்று சொன்னேன்.

''ரோம் நகரிலிருந்து எகிப்து நாடுவரை அலைகடலைத் தாண்டி, ஆரணங்கு உன்னை நாடி வந்த நான் இந்தச் சிறு ஆற்றுக்காக மலைத்து நிற்பேனா? ஆனால் நீ இவ்வாறு மருண்டு நிற்கும் மானைப்போல, ஒடுங்கிக்கிடக்கும் முயலைப் போல ஒதுங்கிக்கிடப்பானேன்! ஆண்டனி என்றதும் ஆடிப்பாடி ஓடிவரும் என் எழிலரசி எங்கே. இப்பொழுது ஆண்டனியை ஏறெடுத்துப்பார்க்கவும் மனமின்றி உட்கார்ந்திருக்கும் பேசா உருவம் எங்கே? இது என்ன கோலம்! எகிப்து நாட்டுப் பொன்னுடைகளில் மின்னிடும் நீ, ஏதோ உடைகளை அள்ளிப் போட்டுக்கொண்டு வந்திருக்கிறாய்?''

ரோம் காலத்தில் உலவிக்கொண்டிருப்பவருக்கு இப்பொழுது இங்கிருப்பவர்கள் அணிந்திருக்கும் ஆடைவகைகள் அலங்கோலமாகத்தான் இருக்கும். பைத்தியக்காரர்களுக்கு மற்றவர்கள் செய்வது பைத்தியமாகத்தானே தெரியும்! எனவே என்னெதிரே உட்கார்ந்திருந்த 'மாவீரர்' கேட்ட கேள்வி எனக்கு ஆச்சரியத்தைத் தரவில்லை. முதலில் எனக்கிருந்த பயம் போய், சற்றுத் தைரியத்துடன் அந்த சமயத்தில் கவனத்தை இழந்துவிடாமல், நானும் பேச ஆரம்பித்தேன். ஒரு குழந்தையிடமும், ஒரு பைத்தியக்காரனிடமும் பேச்சுக்கொடுத்துப் பதில் பெறுவது பொழுதுபோக்கான வேலையல்லவா!

''இது நமது அரண்மனைக்குக் கீழை நாட்டிலிருந்துவந்தகப்பல் வியாபாரி தந்தான். அவன் நாட்டிலிருப்பவர்கள் இப்படித்தான் அணிந்து கொள்வார்களாம்.''

''ஆமாம் அந்தக் கப்பல்காரர்கள் இது போன்ற ஆடைகளையும், முத்தையும், வாசனைப் பொருளையும் கொடுத்துவிட்டு, இங்கிருக்கும் பொன்னையெல்லாம் எடுத்துப்போகிறார்கள். பாலாவிபோன்ற, பனிப்படலம் போன்ற அந்த ஆடைகள் ரோம் சந்தைக்கடைக்கு வந்துவிட்டால் போதும், அரண்மனையும், டைபர்நதித் தோட்டங்களும், ஆடலரங்குகளும், விளையாடுமிடங்களும் தனிமையாகிவிட. ரோம் நகர மகளிரெல்லாம் சந்தைக்கடையில் மொய்த்துக் கிடப்பார்கள். ஒவ்வொரு வணிகனையும் சூழ்ந்து மகளிர்கள் மண்டியிட்டு அமர்ந்திருப்பதைப் பார்க்கும்பொழுது எனக்கே பொறாமையாக இருக்கும்.''

'ஆண்டனி' சிறிதுநேரம் பேசாமல் உட்கார்ந்திருந்தார். ''கிளியோ! ஒருநாள் நமது கப்பற்படைகளைத் திரட்டிக்கொண்டு அந்த நாட்டுக்குப்போய் வெற்றியுடன் திரும்பிவருவேன். உன் காலடியில் அழகிய முத்துக்களைச் சொரிவேன், உன் அரண்மனையெங்கும் அவர்கள் நாட்டு வெள்ளைத் தந்தங்களும், தோகைக் கொத்துக்களும், வாசனை மரங்களும் நிறைந்திருக்கும்படி செய்வேன்! ஆனால் அவற்றையெல்லாம் கொண்டுவந்து, பயனில்லை. எதை அணிந்துகொண்டாலும், எகிப்து நாட்டு உடையிலிருந்தாலும், ஏதன்ஸ்நகர ஆடைகளையணிந்தாலும், ரோம் நாட்டுக் கோலத்திலிருந்தாலும், கீழைநாட்டினர் வகையிலிருந்தாலும் எழிலரசி கிளியோ, எழிலரசிதான்! உன் அழகு குன்றுவதில்லை, எழில் தேய்வதில்லை!''

இவ்வளவு ஆர்வத்துடன் ஆண்டனி பேசியிருந்தால்—காதல் மொழிகளை வீசியிருந்தால் அந்தக் கிளியோபாட்ரா உண்மையிலே பெரும் அதிர்ஷ்டசாலியாகத்தான் இருந்திருக்க வேண்டும்! அவர் ஆண்டனியாக உடைகளை அணிந்துகொண்டது மட்டுமல்ல, ஆண்டனியைப் போன்று பார்த்திட—பேசிட—காதலிக்க—கனிமொழிகளை உதிர்த்திட அவரால் முடிகிறது.

''ஏன் சிரித்துக்கொள்ளுகிறாய்? கிளியோ! என்னைப் பார்!'' என்று கொஞ்சலுடன் அவர் கேட்டார். நான் சிரித்ததைக் கவனித்துவிட்டது தெரிந்தது. ''உன் கண்கள் என்றுமில்லாதவாறு புதுப்பொலிவுடன் ஒளிவிடுகின்றன! நைல் நதி நாகம் என்பது சரியான பெயர் தான். ஒளிவிடும்—என் உள்ளத்தை அள்ளிடும் பார்வை, ஆனால், அதே சமயத்தில் தீண்டியதும் விஷத்தைக் கலந்திடும் பார்வை!''

பேச்சு முதிர்ந்துவிடுமோவென்று பயம் வந்தது. உடனே தனியாகப் போய்விடவேண்டுமென்று சுற்றுமுற்றும் பார்த்தேன்.

"ஏன்?" என்று அவர் கேட்டார்.

"நாழியாகிவிட்டது. நான் போகவேண்டும்' என்று அவசரப்பட்டேன்.

"அதற்குள்ளாகவா! வா, என்னுடன்!" என்று எழுந்தார்.

"போய்விடு! இல்லையானால்...." என்று சத்தமிட்டேன். பைத்தியக்காரனுக்கு எதைச் சொன்னால் புரியும்! நான் கோபத்துடன் சொன்னதைக் கேட்டதும், பலமான அடியால் தாக்கப்பட்டவரைப்போல, அந்த 'வீரர்' மலைத்து நின்றார். "ஏன் இவ்வளவு கோபித்துக்கொள்ளுகிறாய்? உன் மனம் நோக நான் எதுவும் செய்ததது கிடையாது. இதோ போகிறேன்!" என்று திடீரென்று படகிலிருந்து தாவித் தண்ணீரில் பாய்ந்துவிட்டார். சிறிது நேரம் எங்கிருக்கிறார் என்றே தெரியவில்லை. தண்ணீரில் கிளம்புகிற குமிழிகள்தான் தெரிந்தன. எனக்குப் பயமாகிவிட்டது. ஏதாவது தண்ணீரில் மூழ்கி இறந்துவிட்டால்? ஆனால் சிறிது தூரம்போய்த், தண்ணீரில் அவர் தலையைத் தூக்கியதும்தான் எனக்கு உயிர்வந்தது. நான் கலக்கமடைவேன் என்பதை எதிர்பார்த்தவர்போல, அவர் நிமிர்ந்து பார்த்தார்; நான் படகைத் திருப்பிக்கொண்டு போக ஆரம்பித்தேன். அவரோ அலட்சியமாக நீந்திக்கொண்டு கரையை நோக்கிப் போய்க்கொண்டிருந்தார்!

அன்றிரவு மாடியில், என் ஜன்னலோரத்தில் நீண்டநேரம் அமர்ந்திருந்தேன். மாலையில் நான் இருந்த படகு நீரில் சுற்றிவந்ததுபோல, எனது மனப்படகு காலவெள்ளத்தைக் கடந்து பின்னோக்கி இரண்டாயிரம் ஆண்டுகளுக்குமுன் போய்க்கொண்டிருந்தது. உம்! அந்தக்காலம் மிக அற்புதமான உல்லாசமான காலமாயிருந்திருக்கவேண்டும்! நைல் நதிதீரம், கண்கவர் சோலைகளும் களிப்பைத் தரும் சாலைகளும், இவற்றை அணைத்துக் கொண்டு கிடக்கும் தெளிந்த ஆறு, அவற்றின்மீது வழிந்துகிடக்கும் பால் நிலவு! ஆற்றில் உலவிவரும் உல்லாசப்படகுகள், அவைகளிலிருந்து எழும்பி காற்றிலே கலந்துவரும் இனிய கீதங்கள்! மலரிலே தலையணை, காலடியில் மாவீரன்! கனிமொழி கலந்த காதற்பேச்சு! இன்பமயமான அந்த வரலாறுகள்—அந்தக் காலங்கள் காலத்தால் மட்டுமல்ல, கருத்தால் ஏறெடுத்துப்பார்ப்பதற்குக்கூட எட்டாத் தொலைவிலுள்ளன! மாவீரர்கள் மறைந்துவிட்டனர், காலவெள்ளத்தில் காதற்பேச்சுகள் கரைந்துவிட்டன! அதோ! வானத்தில் இப்பொழுதும் ஒளிவிடும் நட்சத்திரங்களும், 'அன்றும் ஒளிவிட்டன, அத்தகைய காதலர்களைப் பார்த்தபடி! ரோம் நகர்மீது, ஏதன்ஸ்மீது, நைல்நதிமீது, கீழை நாட்டார் விட்டுச்சென்ற மரக்கலங்கள்மீது மோதிடும் கடலலைகள் மீது! அந்த நட்சத்திரங்கள் இன்றும் ஒளி விடுகின்றன; ஆனால் அழிந்த நகரங்கள்மீது, பரந்த பாலைவனத்தின்மீது, மூடிக்கிடக்கும் காதலர்களின் கல்லறைகள்மீது! வரலாற்றில்—அந்தக்கால வரலாற்றில்கூட பல கொடுமையான சம்பவங்கள் படிப்போர் கருத்தைக் கலங்கச்செய்யும் கட்டங்கள் இருக்கின்றன. அதேசமயத்தில் நமது கவனத்தை ஈர்க்கும் சம்பவங்கள், இதயக்கனவிலே நிலைபெற்றுவிடுகிற காதற்கதைகள் பல இருக்கின்றன.

நான் எழுந்து, விளக்கொளியில் பீரோவில் புழுதியடைந்துகிடந்த ரோம் வரலாறு ஒன்றைப் புரட்டிப் பார்த்தேன். அதில் ரோம் வீரர்களான ஜூலியஸ்சீசர், மார்க்கஸ் ஆண்டனி—பாம்பே, அக்டேவியஸ் போன்று பலரது படங்கள் இருந்தன. அவர்களிலெல்லாம் மார்க்கஸ் ஆண்டனிதான் கண்கவர் வனப்பினனாகக் காணப்பட்டான். பெரும் ரோம் சாம்ராஜ்யத்தை இழந்துவிட்டு, ஒரு காதல் சாம்ராஜ்யத்தை ஆள அவன் சென்றிருக்கிறான்! கிளியோபாட்ராவின் படத்தைத் தேடிப்பார்த்தேன். கிடைக்கவில்லை அவளும் ஒரு சிறந்த அழகியாகத்தான் இருந்திருக்கவேண்டும்! எது எப்படியிருந்தபோதிலும், காதலுக்காகத் தமது அரசுகளை ஈடுவைத்து, அவர்கள் வரலாற்றில் விளையாடினார்கள். அரசுகளை இழந்தனர், ஆனால் அழியாத காதலைப் பெற்றனர்.

கடைசியாகப் படுக்கைக்குச் சென்றேன். மாலையில் அவர் சொன்ன சொற்கள்—"ஒளிவிடும் கண்கள், உள்ளத்தை அள்ளிடும் பார்வை." திரும்ப என் காதில் ஒலித்தன. ஆண்டனி வேடத்தில் அவர் இருந்தபோதிலும், உண்மையிலேயே ஒவ்வொரு பெண்ணும் விரும்புவது—கனவுகாண்பது—அத்தகைய மொழிகளைக் கேட்பதற்குத்தான், அலைந்த மனதுடன், குழம்பிய சிந்தனைகளுடன் அன்று உறங்கி

னேன். ஏக்கம் நிறைந்த கண்களுடன் என்னைப் பார்த்திடும் ஆண்டனியின் முகம் என் மனக்கண்முன் அடிக்கடி வந்துபோனது.

அழகான வெண்புறு திடீரென்று பறந்து வந்து நம்மெதிரே விழுந்து, தட்டுத் தடுமாறி நடக்க, ஆரம்பத்தில் ஆச்சரியமும் பின் வேடிக்கையும் உண்டாகும். பின் அருகிலே சென்று அதை எடுத்துப் பார்த்தால், காலில் அடிபட்டு இருப்பது தெரிகிறது. உடனே அதைக் குணப்படுத்திவிட நாம் முன்வருகிறோம். பளிங்குப் பதுமைமீது கறைபடிந்திருந்தால், தூய்மையான கண்ணாடிமீது தூசு அடைந்திருந்தால், அழகிய மலர்க்கொத்துகளைத் தாங்கி நிற்கும் பூஞ்செடியில் ஒரு இலைமட்டுப் அரிக்கப்பட்டிருந்தால் உடனே அந்தக் குற்றத்தை நீக்கி நலத்தைப் பாதுகாக்கவே நாம் பாடுபடுகிறோம். மாசிலாமணியைப் பார்த்ததும், முதலில் ஆச்சரியமும், வேடிக்கையும் இருந்தபோதிலும், பின் அவருக்குற்ற நோயையாவது தீர்க்க வேண்டும் என்ற அக்கரை பிறந்தது. நல்ல பண்பாடு, குணம், அழகு, இளமை இவையெல்லாம் அவரது சிந்தனையில் ஏற்பட்ட சிறு குழப்பத்தால் சிதறிக்கிடந்தன. இனிய இசையைத் தரவேண்டிய யாழ், அதன் நரம்புகளில் சிறிது தவறு ஏற்பட்டால் தாறுமாறான சத்தத்தைத் தருவதுபோல, மாசிலாமணியின் உள்ளம் தன் இயல்பை மறந்துகிடந்தது. ஆம்! சித்தம் மாறிப் பித்தனைக் காட்சியளிப்பதற்கு முன் அவர் எவ்வளவு நல்லவராக, எல்லோராலும் போற்றப்படுபவராக, இருந்திருக்க வேண்டும். அதிலும் எவ்வளவு அழகாகப் பேசுபவராக இருந்திருக்கவேண்டும். ஆண்டனியின் பிரதிநிதியாக இருக்கும் பொழுதே அவ்வளவு அழகுசொற்களை வீசிடும் அவர், நல்ல நிலையிலிருந்து தாமாகவே பேசவேண்டுமென்றிருந்தால் என்னிடம் எவ்வாறெல்லாம் பேசியிருப்பார்!

காலையில் எழுந்ததிலிருந்து அன்று பூராவும் என் மனம் சுழன்றபடி இருந்தது. பீரோவில் அடுக்கிக்கிடந்த புத்தகங்களையெல்லாம் புரட்டிக்கொண்டிருந்தேன். ரோம் வரலாறுகள் ஆண்டனி எப்படி வாழ்ந்தான், எகிப்து சென்றான், கிளியோப்பாட்ராவைக் கண்டான், காதல்கொண்டான் என்று விளக்கின. உளநூல்களை எடுத்தால் தெரிந்த உணர்வுக்குப்பின் தெரியாத உணர்வு ஒன்று இயங்கிக்கொண்டு இருக்கிறதென்றும், இந்தத் தெரியாத உணர்வு தலைதூக்கினால், புதைந்துகிடக்கும் எண்ணங்கள், பேச்சுகள், நினைவுகள் வருகின்றன என்றும் அப்பொழுது ஒரு மனிதன் பைத்தியமாகக் கருதப்படுகின்றானென்றும் ஏதேதோ எழுதியிருந்தன. ஆனால் சாதாரண ஒரு மனிதன் ஆண்டனியாக மாறிவிட்டால், அவனைத் திரும்ப எப்படி முன்பிருந்த நிலைக்குக் கொண்டு வருவது என்பது பற்றிச் சொல்லப்படவில்லை.

நான் புத்தகங்களைப் புரட்டிக்கொண்டும், பின் சிறிது நேரம் பேசாமலிருந்தும், அங்கு மிங்கும் அமைதியற்று நடமாடியும் இருப்பதை அம்மா கவனித்திருக்கவேண்டும். "வசந்தா! என்ன இது, இரண்டு நாளாக ஒரே பைத்தியம் பிடித்தவள் மாதிரி இருக்கிறாய்?" என்று அதட்டிவிட்டு, சுற்றிலும் கிடந்த அலங்கோலத்தை ஒழுங்குபடுத்த முயன்றார்கள். ஒரு பைத்தியத்தைப்பற்றி யோசித்துக்கொண்டிருக்கப்போய் நானும் ஒரு பைத்தியமாகிவிட்டேன்!

அன்று மாலை வழக்கம்போல் படகை எடுத்து, மற்றவர்களிடமிருந்து விலகிக்கொண்டு தனியாக அந்தக் கரைநோக்கிப் போனேன். தூரத்திலிருக்கும்பொழுதே அவர் அங்கே நின்றுகொண்டிருப்பது தெரிந்தது. அவர் கையை அசைத்தார், நானும் பதிலுக்கு அசைத்துவிட்டுக் கரையருகேபோய்ச் சேர்ந்தேன். அவர் நெடுநேரம் அங்கே காத்துக்கொண்டிருந்திருக்கவேண்டும். படகு கரையைத் தட்டியதும், அதை இழுத்துக்கொண்டு என்னை உற்றுப் பார்த்தவண்ணம், "கண்ணே! என்மீது கோபமா?" என்று கேட்டார். இல்லையென்று புன்முறுவலுடன் தலையசைத்தேன். நானும் இறங்கிக் கரைக்குப் போகலாம் என்று நினைத்தேன். ஆனால் தண்ணீரில் அடிவைக்கவேண்டியிருந்தது. என்ன செய்யலாமென்று பார்த்துக்கொண்டிருந்தபொழுது, திடீரென்று அவர் என்னைத் தூக்கிக்கொண்டுபோய் கரையிலே சேர்த்தார்!

(தொடரும்)

ஜியார்டனோ புருனோ

[இரா. நெடுஞ்செழியன்]

(முன் இதழ்த் தொடர்ச்சி)

"மத விசாரணை என்ற ரோமன் ஓநாயின், கூரிய நகங்களிலிருந்து, எந்தச் சீமான் வீடுதான் என்னைக் காப்பாற்றிவிட முடியும்? இத்தாலிதான் என்னைத் தாலாட்டி வளர்த்தது; அதே இத்தாலி எனக்குக் கல்லறை கட்டவுங்கூடும்! வெனிஸ் நகரில் தங்கி, என்னுடைய கருத்துக்களை இத்தாலி கேட்டால், எனக்குக் கல்லறை அமைக்க முயலக்கூடும் என்றும் அஞ்சுகிறேன்! ஒரு நகரம் எனக்கு எதிர்ப்பைத் தந்தால், வேறோர் நகரம் எனக்கு ஆதரவு அளிக்க முன்வருகிறது! எனவே வெனிஸ் எனக்குப் பாதுகாப்பு அளிக்கும் என்றே கருதுகிறேன்! ஓ! இத்தாலி! உன்னுடைய அரண்மனைகள் இருட்டறைகளை மறைத்துவைத்திருக்கின்றன; உன்னுடைய அழகு அவைகளின் முகமூடியாக விளங்குகின்றது!" என்ற எண்ண ஓட்டம் அவனுடைய உள்ளத்தில் ஓடிற்று.

இத்தாலிக்குத் திரும்புவோமா, வேண்டாமா என்ற ஆழ்ந்த சிந்தனைக்குப் பிறகு, திரும்புவது என்ற முடிவுக்கு வந்தார். தாயகத்தைக் காணவேண்டும் என்ற ஆவல் இறுதியில் வெற்றிபெற்றது. புருனோ இத்தாலி நோக்கிப் புறப்பட்டார். சுவிட்ஜர்லாந்தை அடைந்து, அங்கு ஜூரிச் என்ற இடத்தில் சிலநாட்கள் தங்கியிருந்துவிட்டுப், பிறகு ஆல்ப்ஸ் மலையைக் கடந்து இத்தாலி நாடு புகுந்தார்.

முதலில் பாதுவா நகரம் போகவேண்டும் என்ற ஆவல் எழுந்தது. அங்கே பல்கலைக் கழகம் இருந்ததால், அங்குள்ள கற்றறிந்த இளைஞர்களிடையே, அறிவியல் பற்றிய கருத்துக்களை வெளியிடவேண்டும் என்ற ஆவல். புருனோ பாதுவாவில் சிலநாட்கள் தங்கியிருந்தார். அவர் பாதுவா வந்து சேர்ந்திருக்கும் செய்தி சிறிது நாட்களுக்குள் இத்தாலி முழுவதும் பரவி, போப்பாண்டவர் காதுக்கும் எட்டிவிட்டது. எங்ஙனும் பரபரப்பு உண்டாகிவிட்டதைக் கண்ட புருனோ அங்கிருந்து வெனிஸ் நகரத்துக்கு ஓடிப்போய்ச்சேர்ந்தார்.

வெனிஸில், புருனோவுக்கு அழைப்பு விடுத்தவராகிய மோசெனிகோவின் மாளிகைக்கு, 1592-ம் ஆண்டு மார்ச்சுத் திங்கள் சென்றடைந்தார். அங்கு அந்தச் சீமான் அவருக்கு வேண்டிய எல்லா வசதிகளும் செய்து தந்தார். இரண்டு திங்கள் காலம் வரையில், புருனோ அந்த இளைஞராயிருந்தச் சீமானின் மகனுக்குத் தாம் கற்றறிந்தவை முழுவதும் சொல்லிக்கொடுத்தார். நீரோடையில் படகில் உலாவச் செல்லும்போதெல்லாம் அவர்களிருவரும் அறிவியல் பற்றியும், கோபர்னிகஸின் கோட்பாடுபற்றியும், அறிவியலைப்பற்றிக் கத்தோலிக்க மதம் கொண்டிருக்கும் கருத்துபற்றியும் பேசிச்செல்வதுண்டு. களங்கமற்ற வான் தெரியும்போது, புருனோ அண்ணாந்து பார்த்து, அதிலுள்ள நட்சத்திரங்கள் பற்றியும், பிற உலகங்கள் (கோள்கள்) பற்றியும் அண்டம் முடிவற்று விரிந்துகிடக்கும் தன்மைபற்றியும் வியந்து கூறி, தம் மாணவனை மகிழ்விக்க விரும்புவார். அந்தச் சீமான் மகன் புருனோ சொல்வது அத்தனையையும் அப்படியே உற்றுக்கேட்டுக்கொள்வான். ஒவ்வொரு நாளும் கேட்பதை, மறுநாள், அப்படியே, அங்கு, சீமானை மறைவாக வந்து காணும் பாதிரியார் ஒருவரிடம், அந்தச் சீமான் சொல்லிவிடுவார். தம்முடைய கருத்துக்கள், பாதிரியார் ஒருவரிடம், சீமானால் அன்றாடம் மறைவாக அறிவிக்கப்படுகின்றன என்பதை, வெள்ளையுள்ளம் படைத்த புருனோ அறியவில்லை. அவர் எப்படி அறிவார்? சூதும், சூழ்ச்சியும், வஞ்சகமும், நாணயமற்ற தன்மையும், நேர்மையற்ற போக்கும், நீதியற்ற நெறியும், பொய்மையும், புனைசுருட்டும், மறைவும் பாதிரியாரிடம் எதிர்பார்க்கக்கூடியவைகளே

யன்றிப், பகுத்தறிவுவாதியிடம் யார்தான் எதிர்பார்ப்பார்கள்? பாம்பின் வாயில், தானே போய் விழுந்த தேரைபோல், புருனோ அந்தச் சீமான் மாளிகையிலே விரும்பி இருந்து வந்தார்.

செப்டெம்பர் திங்களில்,வெண்ணிலா காய்ந்து கொண்டிருந்த ஒரு நாள் இரவு, புருனோ, அட்ரியாட்டிக் கடலின் அலைகள் மோதும் மண்டபத்தின் தூண் ஒன்றிலே, சாய்ந்துகொண்டு, இயற்கையின் எழிலைக் கண்டு மகிழ்ந்துகொண்டிருந்தார். நிலவொளியிலே துள்ளி எழும் அலைகள் சதிராடும் காட்சியைக் கண்டு களித்தார். "வாழ்க்கை எவ்வளவு இன்பகரமாக இருக்கிறது! இயற்கை எவ்வளவு அழகாக இருக்கிறது! அப்படியிருந்தும், முட்டாள்கள் நரகத்தின் நெருப்பைப்பற்றி பேசுகிறார்கள்; உடன் பிறந்தோரைச் சபிக்கிறார்களே!" என்று தமக்குள்ளே எண்ணிச் சிரித்துக் கொண்டார்.

புருனோ, தம்மையும் மறந்து இயற்கை இன்பத்தை நுகர்ந்துகொண்டிருக்கும்போது, ஒரு படகு ஓசையிடாமலும், விரைவாகவும் வந்து, மண்டபத்தின் பக்கத்தில், தண்ணீரில் விழுந்திருந்த அதன் நிழலில் தங்கிக்கொண்டது. அந்தப் படகு வந்ததையோ, மண்டபத்தின் பக்கத்தில் வந்து தங்கியிருந்ததையோ புருனோ கவனிக்கவில்லை.

"கடவுள் இல்லாமல் வாழ்வு எவ்வளவு அழகாக இருக்கிறது! இயற்கைப் பெருந்தாயே! நீ எவ்வளவு அமைதியாய், உறுதியாய், மாறுதல்களற்ற தன்மைக்கிடையே மாறுதல்களைச் செய்பவளாய் இருக்கிறாய்! அழகில் எவ்வளவு சிறந்து விளங்குகிறாய்! பெருந்தன்மையில் எவ்வளவு புகழோடு காணப்படுகிறாய்! அவர்களுடைய வேடிக்கைச் செயல்களையெல்லாம் நான் வழிபடவேண்டும் என்பதற்காக, உன்னையே நிந்தித்து ஒதுக்கும்படிச் சொல்கிறார்களல்லவா? ஓ! அழியாப் பேரழகே!" என்று மெல்லிய குரலில் தமக்குத்தாமே கூறிக்கொண்டு, பிறகு நிமிர்ந்து நின்று, இரண்டு கைகளையும் நீட்டி, தொடர்ந்து "ஓ! எல்லையற்ற பெருவெளியே! உன்னுடைய கட்டுப்பாடற்ற விடுதலையை விட்டுவிட்டு நான் எப்படி வாழ்வேன்? உன்னுடைய பேரொளிக் கதிர்களை விட்டுவிட்டு, நான் எப்படி நிலைத்து நிற்பேன்?...." என்று மகிழ்ச்சிப் பெருக்கால், வாய்விட்டுக் கூறினார்.

அந்த நேரத்தில் மறைந்திருந்த படகு, படிக்கட்டுகளின் அருகில் வந்து நின்றது. முகமூடி தரித்த வஞ்சகர்கள், படகிலிருந்து இறங்கி, ஒரு கறுப்புத் துணியைப் புருனோவின் தலை மீது வீசி, புருனோவை அப்படியே அழுத்திப் பிடித்துக்கொண்டனர். அவருடைய ஒளிர்ந்த கண்கள் அதற்குப் பிறகு அலைகளின் அழகைக் காணவில்லை! அவருடைய கைகள் நீலவான் நோக்கி நீட்டப்படவில்லை! மதவிசாரணை என்னும் வெறி நாய்களின் பிடியிலே ஜியார்டனோ புருனோ சிக்குண்டார்!

புருனோ இருட்டறையில் தள்ளப்பட்டார்; நிர்வாணமாக்கப்பட்டார்; அவருடைய உடல் இரும்புச் சித்ரவதைப் பொறியோடு பொருத்தப்பட்டது; அவருடைய மணிக்கட்டுகளும், மூட்டுகளும் அந்தப் பொறியோடு இரும்புச் சங்கிலியால் பிணைக்கப்பட்டன; தலை பின்னால் சாய்த்து இழுக்கப்பட்டது; ஆனால் உதடும் நெற்றியும் உறுதியிழக்கவில்லை; ஒளி வீசும் கண்கள் அச்சப்படவில்லை! இந்த நிலைக்குக் காட்டிக்கொடுத்தவன் அந்தச் சீமான் ஜியோவன்னி மோசெனிகோதான்! இவ்வளவும் 'அருளுடைய' ஆண்டவன் பேரால், 'அன்புடைய' ஏசுவின் பேரால், 'பண்புடைய' மதத்தின் பேரால் செய்யப்பட்டன!

இரும்புப் பொறியிலே வைத்து, உருளைகளைச் சுழற்றி, அவருடைய உடலைப் பிழிந்தார்கள், 'அன்பு' மதத்தவர்கள். அவருடைய உடல் முழுவதும் புண்ணாக்கப்பட்டது; புண்களிலிருந்து குருதிச்சொட்டுகள் கசிந்து சொட்டியவண்ணமிருந்தன; அவருடைய கைகால்கள் செயலற்றுப்போயின; அவருடைய நெற்றியும், உதடுகளும் வலி தாளமாட்டாமல் வதங்கியிருந்தன.

"ஏ, மத நிந்தகனே! இப்பொழுதாவது உன்னுடைய குற்றத்தை நினைந்து வருந்து! நீ எந்தக் கடவுளை நிந்தனை செய்தாயோ அந்தக் கடவுளைப் பார்த்து வேண்டிக்கொள்! நீ எந்த சர்ச்சை ஒதுக்கினாயோ, அந்தச் சர்ச்சை நோக்கி இறைஞ்சு! உன்னுடைய ஆண்டை கடவுள்தான் என்பதை ஒப்புக்கொள்! உன்னுடைய மத நிந்தனைகளுக்காக வருந்து! இவ்வளவும் செய்தால், இப்பொழுது

கூட உனக்கு அருள்பாலிக்கப்படும்!” என்று அவரிடம் கூறப்பட்டது.

“நான் எந்த உண்மையை வழிபடுகிறேனோ, அந்த உண்மை என்னை இப்பொழுதும் உண்மையாகவே இருக்கச்செய்து காப்பாற்றி வருகிறது” என்ற சொற்கள், வலி தாளாமல் வருந்தும் புருனோவின் வாயினின்றும், ஒன்றன் பின் ஒன்றாக வெளிப்பட்டன.

உணர்ச்சியற்றுக் கிடந்த புருனோவின் உடல், அந்த இரும்புப் பொறியினின்றும் அகற்றப்பட்டுப், பாதாளச் சிறை ஒன்றில் கொண்டுபோய்த் தள்ளப்பட்டது. ஆறு ஆண்டுக்காலம் அந்த இருட்டறையிலேயே கிடந்தார், ஜியர்டனோ புருனோ! உண்மையை உரைத்ததற்காக; பொய் சொல்ல மறுத்ததற்காக! அந்த ஆறு ஆண்டுக் காலத்தில் கதிரவனொளி அவர்மேல் பட்டதில்லை; எந்த நண்பரின் குரலையும் அவர் காது கேட்டதில்லை; எந்தச் சிரிப்பையும் அவரது ஏக்கங்கொண்ட கண்கள் பார்த்ததில்லை; எந்த ஒரு புத்தகமும் அவரது தனிமையில் மகிழ்ச்சியூட்ட வந்ததில்லை; எந்த ஒரு பேனாவும் அவர் கையில் கொடுக்கப்பட்டதில்லை. அந்தச் சிறை, உயிரோடு புதைக்கப்பட்ட அவரின் கல்லறையாகக் காட்சியளித்தது. சிந்திக்கத் துணிவுகொண்ட ஒரு மனிதனிடம், கிருத்தவன் காட்டிய ‘கருணை’ அதுதான்!

ஆறு ஆண்டுக்காலம் வெனிஸ் நகரக் கல்லறையிலும், இரண்டு ஆண்டுக்காலம் ரோம் நகரிலும் கழிந்தன. ரோம் நகரிலிருந்த இரண்டு ஆண்டுக் காலமும் விசாரணையிலேயே முடிவடைந்தது. வெனிஸ் இருட்டறையில் கிடந்ததால், புருனோவின் கரிய தலைமயிர் வெண்மை நிறம் பெற்றது; ஒளிபெற்றிருந்த அவரது கண்கள் இப்பொழுது கதிரவன் வெளிச்சத்தைக்கண்டு கூசின; வலிவடைந்திருந்த அவரது கைகால் எலும்புகள் வளைந்து காணப்பட்டன. வயதானக் கிழவரின் தோற்றம்போல அவரது உடலம் மாறியிருந்தது. கிருத்தவர்கள் ஏசுநாதரின் பேரால், அவரைப் பட்டினிபோட்டு, சித்ரவதைக்கு உள்ளாக்கி வைத்திருந்தனர். நல்ல வலிவுள்ள மனிதனைக் கத்தோற்றமளிக்கவேண்டிய காலத்தில், அவர், தொண்டுகிழவனைக் காட்சியளித்தார்!

எட்டாண்டுச் சித்ரவதைக் கொடுமைகளுக்குப் பிறகு, அவர் சர்ச் நீதிபதிகளின் முன்னால் கொண்டுவந்து நிறுத்தப்பட்டார். அவர் நாத்திகன் என்று கூறப்பட்டு மதவிலக்குச் செய்யப்பட்டார்! அவர் திருத்தப்படமுடியாதவர்; ஒழிக்கப்படவேண்டியவர் என்று வெளிப்படையாகச் சொல்லப்பட்டார்! அவர், ஒரு சொட்டுக் குருதியும் சொட்டாதவகையில், நெருப்புக்குண்டத்தில்போட்டுப் பொசுக்கப்படவேண்டும் என்று தீர்ப்பு அளிக்கப்பட்டார்! அந்தப் பணியை நிறைவேற்றுவதற்காக அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டார்!

அவர்கள் தீர்ப்புச் சொல்லிக்கொண்டு இருக்கும்போது, புருனோ வீர உணர்ச்சியோடு எழுந்து நின்றார்; ஆனால் மதவாதிகள் அவரை வலுக்கட்டாயமாகத் தங்களுடைய ஆற்றலைப் பயன்படுத்தி, அவரை மண்டியிட்டுக் கேட்கும்படி செய்தனர். தீர்ப்புக்கூறி முடிந்ததும், மண்டபம் முழுதும் அதிரும்படியாகப், புருனோ பெருத்த குரல் ஒன்று எழுப்பினார். பல ஆண்டுகள் இருட்டறையிலே கிடந்ததால், அவருடைய குரல், முன்னைப்போன்று மென்மையாக அமையாமல், மிகக் கரடுமுரடாக இருந்தது. “தீர்ப்பைக் கேட்கும்போது எனக்கு ஏற்பட்ட அச்சத்தைவிட, தீர்ப்பை வெளியிடும்போது உங்களுக்கு இருந்த அச்சம் அதிகமாக இருந்திருக்கிறது என்பதை நான் நன்கு அறிகிறேன்” என்ற குரலை எழுப்பிவிட்டு தலைநிமிர்ந்தவண்ணம், உண்மைக்கு உயிர்துறக்கப் போகிறோம் என்ற மகிழ்ச்சியுடன், மண்டபத்தை விட்டு வெளியேறினார்.

புருனோ தம்முடைய கருத்தை மறுத்து, வருத்தத்தைத் தெரிவித்துக்கொண்டால், உயிரோடு விடப்படுவார் என்று சொல்லி, எட்டு நாட்கள் ‘கருணை’யாக அளிக்கப்பட்டன. பத்து ஆண்டுக்காலம் ஐரோப்பாவில் அலைந்து திரிந்தபோதும், எட்டு ஆண்டுக்காலம் சிறையில் கிடந்து அவதிப்பட்டபோதும் தம்முடைய கருத்தை மாற்றிக்கொள்ளவும், மன்னிப்புக் கோரி வருத்தத்தைத் தெரிவித்துக்கொள்ளவும் இணங்காத தாம், கடைசி எட்டு நாட்களுக்குள் தம் செய்கைக்கு வருந்தி மன்னிப்புக் கோருவோம் என்று மதவாதிகள் எதிர்பார்த்தது

பைத்தியக்காரத்தனமாகும் என்று எண்ணி, புரூனோ எள்ளி நகையாடினார்.

1600-ம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் 17-ம் நாள் மலர்ந்தது; புரூனோ சாகடிக்கப்பட வேண்டிய நேரமும் வந்தது.

காம்போ டேய் பிஃயோரி என்ற இடத்திற்குப் புரூனோ அழைத்துச் செல்லப்பட்டார். அவர் போகும்போது மதவெறியர்கள் வழி நெடுக ஏராளமாகக் கூடிநின்று கூச்சலிட்டுக் கேலியும் கிண்டலும் செய்தார்கள். போப்பாண்டவரைக் கண்டு வழிபட வந்திருந்த ஏராளமான மதபக்தர்கள் இந்தச் செயலில் ஈடுபட்டனர். புரூனோ மஞ்சள் நிறமுடைய துணியால் அணிவிக்கப்பட்டிருந்தார். மதநிந்தகன் என்பதைக் காட்டுவதற்கு மஞ்சள்நிறத் துணியைத்தான் அக்கால மதவெறியர்கள் பயன்படுத்தினர். அந்தத் துணியில் பேய்கள் போன்றும், நெருப்பு எரிவதைப்போன்றும், சிலுவைகளும் படங்களாகப் பொறிக்கப்பட்டிருந்தன. புரூனோ நிமிர்ந்த தலையோடு, ஒளி வீசும் கண்களோடு, தளராத தயங்காத அடிகள் போட்டு, அமைதியுடன் நடந்துசென்றார். ஒரு பாதிரியார் சிலுவை ஒன்றைப் புரூனோவின் முகத்தின் எதிரே பிடித்து, அதனை அவர் முகத்தோடு ஒத்த வந்தார்; உடனே புரூனோ அதன்மேல் தம் முகம் படாதவண்ணம், தம் தலையை அப்பால் திருப்பிக்கொண்டார். பிறகு நெருப்புக்குண்டத்தின் நடுவே நடப்பட்டிருந்த மரத்தில் புரூனோ இறுகக் கட்டப்பட்டார். அவருடைய வாயிலிருந்து ஒரு சொல்லும் பிறக்கவில்லை. ஆண்டவன் பெயரால், ஏசுவின் பெயரால், அன்பு மதத்தின்பெயரால் அவரைச் சுற்றி விறகுகள் அடுக்கப்பட்டுத், தீ மூட்டப்பட்டது. அவரைச் சுற்றி தீ கொழுந்துவிட்டு எரிய ஆரம்பித்தது. அவரிடமிருந்து யுடு கூச்சலும் எழும்பவில்லை. தீயும் புகைமரு அவரது முகத்தைக் கப்பிக்கொள்வதற்கு முன்பு, கடைசி முறையாக மக்கள் பார்க்கும்போதும், அவருடைய முகம் பெருமிதத்தோடு கூடிய பொலிவை வீசியவண்ணமிருந்தது. மிக விரைவில், தீயும், புகையும் அவர் உடலையெல்லாம் மறைத்துவிட்டன. புரூனோவின் உருவத் தோற்றம் அழிந்தது; மறைந்தது!

புரூனோவின் உடலம் சிதைக்கப்பட்டது; ஆனால் அவருடைய, உள்ளம், எங்கெல்லாம் உறுதியும் உண்மையும், நேர்மையும் நீதியும், அறிவும் அன்பும், நாணயமும் நல்ல பண்பும் நிலவிற்றோ, அங்கெல்லாம் சிறந்துவிளங்கிற்று! உண்மைக்காக உயிர்நீத்த உத்தமரின் பட்டியலிலே சிறந்த ஒரு இடத்தை என்றென்றும் பெற்றுவிட்டார், ஜியார்டனோ புரூனோ! அவர் புகழ் அவனியில் என்றும் மங்காது, மறையாது! பகுத்தறிவுவாதிகளின் உள்ளத்தில் கொலுவீற்றிருக்கும் அழியா ஓவியமாவார் அவர்!

ஜியார்டனோ புரூனோ கடமையைச் செய்ய விரும்புவோர்க்கு, உண்மையாகப் பாடுபடுவோர்க்கு உறுதியையும், ஊக்கத்தையும் என்றென்றும் பயக்கும் ஒரு பெருஞ் சொற்றொடராகும்!

புரூனோவே வேறு ஒருபொழுது குறிப்பிட்ட, "ஒரு நூற்றாண்டில் சாவக் கற்றுக்கொள்வது என்பது, வருகின்ற பல நூற்றாண்டுகளிலும் வாழக் கற்றுக்கொள்வதாகும்" என்ற சொற்கள் தாம், எரிக்கப்பட்டபோது அவர் நின்ற நிலையால், உலகுக்கு உணர்த்தப்பட்ட உயரிய உண்மையாகும்!

குற்றமற்ற சாவு

சாக்ரடீஸ் நஞ்சு உண்டு சாவதற்குச் சற்று நேரத்திற்கு முன்னால், அவருடைய மாணாக்கரில் ஒருவன், அவரைப்பார்த்து, "நீங்கள் ஒரு குற்றமும் செய்யாத நிலையில், இறந்துபடவேண்டும் என்று ஏற்பட்டிருப்பது, எவ்வளவு துக்கத்தைத் தருகிறது, தெரியுமா!" என்று கலங்கிக் கூறினாம்.

அதற்குச் சாக்ரடீஸ், "என்ன! என்னை ஒரு குற்றவாளியாகவே இறக்கும்படியாகவா சொல்லுகிறாய்?" என்று பதிலிறுத்தாராம்.

நன்மை செய்யும் ஆற்றல் எது?

இயற்கையை மீறிய பேராற்றல் ஒன்றின் மீது, பெரும்பாலான மக்கள் நம்பிக்கை வைக்கின்றனர். அவர்கள், ஒரு கடவுளை விட்டால், மற்றொரு கடவுளை உடனே கற்பனை செய்துகொள்கிறார்கள். ஜெஹோவா என்ற கடவுளைக் கைவிட்டபிறகு, மக்களின் நன்மைக்காகப் பாடுபட்டுவரும் பேராற்றல் ஒன்றினைப் பற்றிப், பேசுகிறார்கள்.

இந்தப் பேராற்றல் என்பதுதான் என்ன?

மனிதன் முன்னேறுகிறான்; அவன், அனுபவத்தின் வாயிலாக உள்ளபடியே முன்னேற வேண்டியவனாக இருக்கிறான். ஒரு குறிப்பிட்ட இடத்திற்குச் செல்ல விரும்பும் மனிதன் ஒருவன், இரண்டு சாலைகள் பிரியும் ஒரு இடத்திற்கு வந்து சேருகிறான். எந்தவழியாகப் போகலாம் என்று சிந்திக்கிறான். இடதுகைப் பக்கமாகச் செல்லும் சாலையே சரியானதாகும் என்று நம்பிக்கொண்டு, அவ்வழியே நெடுந்தொலைவு செல்கிறான். இறுதியில் அந்தவழி சரியானது அல்ல என்ன கண்டுகொள்கிறான். அவன் மீண்டும் திரும்பிவந்து, வலது கைப்பக்கமாகச் செல்லும் சாலைவழியே செல்லுகிறான். அவன் விரும்பிய இடத்தைச் சென்றடைகிறான். மறுபடியும் ஒருமுறை அவன் அந்த இடத்துக்குப் போகிறான். இம்முறை அவன் இடதுகைப்பக்கச் சாலைவழியே செல்ல முயலுவதில்லை. ஏனெனில் அவன் ஏற்கனவே அவ்வழியே சென்று பார்த்திருக்கிறான்; அது தவறானவழி என்பதையும் அறிந்திருக்கிறான். அவன் இம்முறை சரியான வழியை எளிதில் பின்பற்றிச் செல்கிறான். இப்படி நடைமுறை நடவடிக்கையிருந்தும், மதவாதிகள் கூறுகிறார்கள், "மக்களின் நன்மைக்காகப் பேராற்றல் ஒன்று இருந்துகொண்டு வேலைசெய்துவருகிறது" என்று!

குழந்தையொன்று சுடர்விட்டு எரியும் நெருப்பைக் கண்டு மகிழ்ச்சிகொள்கிறது; உடனே தன் இளந்தளிர்க்கையால் அதனைப் பிடிக்கிறது. கை நெருப்பில் பட்டவுடன் பொசுங்கிவிடுகிறது; அதற்குப் பிறகு, அந்தக் குழந்தை, தன்கையை நெருப்பிற்குத் தொலைவாகவே வைத்துக்கொள்கிறது. நன்மை பெறுவதற்கான வழியில் உள்ளுக்குள் வேலை செய்யும் ஆற்றல், அந்தக் குழந்தைக்கு ஒரு பாடத்தைக் கற்பிக்கிறது.

உலகில், பட்டுப்பட்டு ஒருசேரக் குவிந்த அனுபவம், ஒரு ஆற்றலாகவும் முயற்சியாகவும் இருந்து, நன்மையை உண்டாக்குவதற்கான முறையில் வேலை செய்துவருகிறது. இந்த ஆற்றல் மனச்சான்று அல்ல; அறிவுடைமையும் ஆகாது. அதற்கு ஒரு விருப்பம் கிடையாது; அதற்கு ஒரு தேவையும் கிடையாது. அது ஒரு முடிவு ஆகும்.

நாம் கொண்டிருக்கும் ஒழுக்க உணர்வை, அதாவது மனச்சான்றை, வைத்துக்கொண்டு, கடவுள் இருக்கும் தன்மையை நிலைநாட்ட, ஆயிரக்கணக்கானவர்கள் முயன்று பார்க்கிறார்கள்.

ஒழுக்க உணர்வு, கடமையுணர்வு, பரிவு முதலியவைகள் இறக்குமதி செய்யப்படும் பண்புகள் என்றும், மனச்சான்று என்பது வெளியிலிருந்து ஆண்டவனால் கொடுக்கப்படுவது என்றும் இந்த மதவாதிகளும், தத்துவாசிரியர்கள் என்று சொல்லப்படுபவர்களும் கூறிவருகிறார்கள். இந்தப் பண்புகளுக்கான அடிப்படை இங்கே உண்டாக்கப்படுவதில்லை என்றும், அது மனிதனாலேயேகூட உண்டாக்கப்படுவதில்லை என்றும், கூறி, கடவுள் ஒருவரைக் கற்பனை செய்துகொண்டு, அவரிடமிருந்தே அது வந்தது என்றும் சொல்லிவருகிறார்கள்.

மனிதன், சமுதாயமாக வாழும் உயிரினத்தைச் சேர்ந்தவனுவான். நாம் குடும்பங்களாக, இனங்களாக, நாடுகளாகக் கூடிக்கூடி வாழ்கிறோம்.

குடும்பம், இனம், நாடு ஆகியவற்றைச் சேர்ந்த உறுப்பினர்களில், யார்யார், முறையே குடும்பம்—இனம்—நாடு ஆகியவற்றின் மகிழ்ச்சியைப் பெருக்கக் காரணமாக இருக்கிறார்களோ, அவர்கள் பொதுவாக நல்லவர்கள் என்று கருதப்படுகிறார்கள். அவர்கள் புகழப்படுகிறார்கள்; போற்றப்படுகிறார்கள்; மரியாதை செலுத்தப்படுகிறார்கள். அவர்கள் நல்லவர்கள் என்று மதிக்கப்படுவதோடு, ஒழுக்கத்திற் சிறந்தவர்களாகவும் கருதப்படுகிறார்கள்.

குடும்பம், இனம், நாடு ஆகியவற்றைச் சேர்ந்த உறுப்பினர்களில், யார் யார், அவற்றிற்குத் துன்பத்தை இழைக்கிறார்களோ, அவர்கள், தீயராகக் கருதப்படுகின்றனர்; அவர்கள் குற்றஞ்சாட்டப்படுகிறார்கள்; ஒதுக்கப்படுகிறார்கள்; தண்டிக்கப்படுகிறார்கள். அவர்கள் ஒழுக்கங்கெட்டவர்களாகப் பொதுவாக மதிக்கப்படுகிறார்கள்.

குடும்பமும், இனமும், நாடும் ஒரு அளவான நடவடிக்கையையும்—ஒழுக்கத்தையும், உண்டாக்கிக்கொள்கின்றன. இதில் இயற்கைக்கு மீறிய 'பேராற்றல்' எதுவும் இல்லை!

மனித சமுதாயத்தில் மிகச் சிறந்தவர் கூறுகிறார், "மனச்சான்று அன்பிலிருந்து பிறக்கிறது" என்று.

நல்லது செய்யவேண்டும் என்ற பரிவுணர்ச்சி—கடமையுணர்ச்சி, ஆகியவை, இயல்பாகவே உற்பத்தி செய்யப்படுகின்றன.

காட்டுமிராண்டி மக்களிடையில், செயல்களின் உடனடியான விளைவுகளே, ஆராய்ச்சிக்கு எடுத்துக்கொள்ளப்படும். மக்கள் முன்னேற முன்னேற, காலத்தால்—இடத்தால் மிகத்தொலைவிலுள்ள விளைவுகளும் எடுத்துக்கொள்ளப்படுகின்றன. நடவடிக்கையின் தரம் உயர்வடைகிறது. சிந்தித்துப் பார்க்கும் தன்மை வளர்க்கப்படுகிறது. மனிதன், மற்றொருவர் நிலையில் நின்று சிந்தித்துப் பார்க்கத் தெரிந்து கொள்கிறான். கடமையுணர்ச்சி நாளுக்குநாள் வலிவடைகிறது; உறுதியும் பெறுகிறது. மனிதன் தன்னைத்தானே விசாரித்தறிகிறான்.

அவன் அன்பு காட்டுகிறான்; அந்த அன்பு உயர்ந்த நற்பண்புகளுக்கு ஆரம்பமாகவும், அடிப்படையாகவும் அமைகிறது. அவன், அன்பு செலுத்துகின்ற ஒன்றுக்குத் தீங்கிழைக்கிறான்; அது குறித்துப் பிறகு அவனுக்குத் துயர், மனத்தொல்லை, வருத்தம், மனச்சான்று எல்லாம் ஏற்படுகின்றன. இப்படிப்பட்ட நிகழ்ச்சிகள் எல்லாவற்றிலும் இயற்கைக்கு மீறிய 'பேராற்றல்' எதுவும் இல்லை!

மனிதன் தன்னைத்தானே ஏமாற்றிக்கொள்கிறான். இயற்கையே ஒரு கண்ணாடிபோல் விளங்குகிறது. மனிதன், அதில், தன்னுடைய உருவத்தைக் கண்டுகொள்கிறான். இயற்கைக்கு மீறிய தன்மையையுடையதாகக் கருதப்படும் மதங்களெல்லாம், கண்ணாடிக்குப் பின்புறம் உள்ள உருவத்தையும் கண்டுகொள்வதாகப் பாசாங்கு செய்கின்றன!

ஆத்மீக நெறியில் நின்று, தத்துவக் கருத்துக்களைக் கூறும் தத்துவ ஆசிரியர்களெல்லாம், பிளோட்டோவிலிருந்து ஸ்வீடன்போர்க் வரையில், எல்லோரும் உண்மைகளை உற்பத்தி செய்தே கொடுக்கின்றனர்; மதங்களைக் கண்டுபிடித்தவர்களும் அதே செயலைத்தான் செய்திருக்கிறார்கள்!

எல்லையற்ற கடவுள் ஒருவர் இருக்கிறார் என்றே வைத்துக்கொள்வோம்; அவருக்காக நாம் என்ன செய்யவேண்டும்? அவர் எல்லையற்ற தன்மை கொண்டவராதலால், அவர் கட்டுப்பாடற்றவராகிறார்; அவர் கட்டுப்பாடற்றவராகிறபடியினால், அவர் நன்மைபெறச் செய்யவோ, தீமைபெறச் செய்யவோ முடியாது. அவருக்குத் தேவை எதுவும் இல்லை. அவர் எல்லாவற்றையும் கொண்டிருக்கிறார்!

எல்லையற்ற பரம்பொருள், தன்னுடைய புகழ்ச்சியை விரும்புகிறது என்று, ஒரு மனிதன் நம்பியிருப்பது, எவ்வளவு தற்பெருமைத் தனமாகும் என்பதைச் சிந்தித்துப் பாருங்கள்!

நம்முடைய மதம் சாதித்தது என்ன? மற்றைய மதங்கள் எல்லாம் தவறுடையன, நாம் நம்முடைய மதத்தைப்பற்றி மட்டுமே கவலைப்பட்டால் போதும் என்று கிருஸ்தவர்கள் கூறுகிறார்கள்; கிருஸ்தவ மதத்தைப்பற்றி மட்டுமே ஆராய்வதை ஒப்புக்கொள்கிறார்கள். அந்த அளவுக்கே நாமும் ஆராய்ந்து பார்ப்போம்!

கிருஸ்தவமதம் ஏதாவது நன்மை புரிந்ததா?

மனிதர்களைப் பெருந்தகையாளராகவும், அருள்நெஞ்சுடையவர்களாகவும், நாணயம் கொண்டவர்களாகவும் அது ஆக்கிற்றா? மாதா கோயில்கள் ஆதிக்கம் பெற்றிருந்தபோது, மக்கள் மிக்க ஏற்றம் பெற்றவர்களாகவும், மிக்க மகிழ்ச்சி கொண்டவர்களாகவும் ஆக்கப்பட்டார்களா?

கிருஸ்தவ மதம் இத்தாலி, ஸ்பெயின், போர்ச்சுக்கல், அயர்லாந்து ஆகியவிடங்களில் என்னென்ன நன்மைகளைப் புரிந்தது?

ஹங்கேரிக்கோ, ஆஸ்டிரியாவுக்கோ மதம் சாதித்த நன்மை என்ன? சுவிட்ஜர்லாந்து, ஹாலந்து, ஸ்காட்லாந்து, அமெரிக்கா ஆகிய இடங்களில் கிருத்தவம் என்ன முன்னேற்ற நிலைமையை உண்டாக்கிற்று? நாம் நாணயமான முறையில் சிந்தித்துப்பார்ப்போம். மதம் இல்லாமல் இருந்தால், இந்த நாடுகளெல்லாம் வீணாகிப் போயிருந்திருக்குமா? கிருத்தவத்தைத்தவிர, வேறு மதத்தை, இந்த நாடுகளெல்லாம் கொண்டிருந்தால், இவை பாழடைந்து போயிருந்திருக்குமா?

ஜோராஸ்டரைப் பின்பற்றுபவராக மாறியிருந்தால், டார்க்குவேமாடா கெட்டுப்போயிருந்திருப்பாரா? தென்கடல் தீவுகளில் வழங்கும் மதத்தைப் பின்பற்றியிருந்தால், கால்வின் இன்னமும் மிகவாகக் குருதிவேட்கை கொண்டவராக மாறியிருந்திருப்பாரா? தந்தை, தனயன், புனிதஆவி ஆகியோரை மறுத்திருந்தால், டச்சு நாட்டு மக்கள் இன்னமும் மிகவாக முட்டாள்களாக மாறியிருந்திருப்பார்களா? கிருஸ்துவைப் பின்பற்ற மறுத்துக் கன்பூஷியஸ் கொள்கையை ஏற்றுக்கொண்டிருந்தால், ஜான் நாக்ஸ் மிகக் கேடானவராக மாறியிருந்திருப்பாரா?

அருள் உள்ளங்கொண்ட பரிசுத்த மதப் பாதிரிமார்களை எடுத்துக்கொள்ளுங்கள்! அவர்களுக்குக் கிருத்தவமதம், எதைக் கற்றுக் கொடுத்தது? அவர்கள் மகிழ்ச்சியை வெறுத்தார்கள்! அவர்கள் வாழ்க்கை வாயிலிலேயே சாவுத்துணியைக் கட்டித் தொங்கவிட்டார்கள்! அவர்கள் தொட்டிலையே பிணப்பெட்டியாக மாற்றினார்கள்! அவர்கள் பன்னிரண்டு மாதங்களையும் 'டிசம்பர்' மாதங்களாகவே கொண்டார்கள்! அவர்கள் குழந்தைப்பருவத்தை வெறுத்தார்கள்; இளமையை வெறுத்தார்கள்; குழந்தைகளின் மழலை மொழிகளை வெறுத்தார்கள்; காலை மகிழ்ச்சிப் பாடலை வெறுத்தார்கள்!

பரிசுத்த மதம் முழுக்க முழுக்க 'சாபக் கேடாக' விளங்கிற்று! பரிசுத்த மதத்தைச் சார்ந்தவன், பைபிளை ஆண்டவன் வாக்கு என்றே நம்பினான்; இந்த நம்பிக்கை கொண்டவர்கள்தாம் கொடுமையாளராகவும், கீழ்மையாளராகவும் காணப்பட்டார்கள்! இப்படிப்பட்ட புனித மதத்தைச் சார்ந்தோர், வட அமெரிக்க இந்தியர்களின் மதத்தைப் பின்பற்றியிருந்தால், மிகக் கேடுகெட்டவர்களாகவா போயிருந்திருப்பார்கள்?

பைபிளில் கொண்டிருந்த நம்பிக்கை, மனித சமுதாயத்தின் மீது எப்படிப்பட்ட ஆதிக்கத்தை நிலைநிறுத்தியது என்பதற்கு, ஒரு உண்மையை உங்கள் நினைவிற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

அரசி எலிஸபெத்தின் முடிசூட்டுவிழாவின் போது, ஒரு தொண்டு கிழவர், ஒரு ஜெனிவா பைபிளை, அரசியினிடத்தில் பரிசாக நல்கினாராம். கிழவர், காலத்தின் பழமைபோல் நின்றாராம்; அரசி, உண்மையின் தோற்றம்போல் குழந்தை வடிவில் நின்றாளாம். அரசி அந்தப் பைபிளைப் பணிவன்போடு வாங்கிப், பக்தியுடன் முத்தமிட்டு, அதில் கூறப்பட்டிருப்பவைகளை அப்படியே கடைப்பிடிப்பதாக உறுதிமொழி கூறினாளாம். அந்தப் பைபிளைப் பெற்றதன் அறிகுறியாகத்தான், அரசி, பயபக்தியோடு, கத்தோலிக்க மதகுருமார்களை வாளுக்கிரையாக்கினாள் போலும்!

பைபிளை நம்பிய பிராட்டெஸ்டண்டுகளின் உண்மை உணர்ச்சி எப்படிப்பட்டது என்பதை, இந்த நிகழ்ச்சியிலிருந்து நாம் தெளிவாகத் தெரிந்துகொள்ளலாம். வேறு சொற்களால் கூறவேண்டுமானால், கத்தோலிக்க உணர்ச்சி எவ்வளவு கொடுமையானதாகவும், கொடூரமானதாகவும் காணப்பட்டதோ, அதே அளவு இதுவும் காணப்பட்டது என்னலாம்.

பைபிள், ஜியார்ஜியாவிலுள்ள மக்களை அன்புடையவர்களாகவும், அருளுடையவர்களாகவும் செய்திருக்கிறதா? கிருஸ்தவமதக் கொலைகாரர்கள், மரக்கடவுள்களையும், கற்கடவுள்களையும் வணங்கியிருந்தால், இன்னமும் மிகவாகவா மூர்க்கத்தனமாய் இருந்திருப்பார்கள்?

—இரா. நெடுஞ்செழியன்.

பூனை

வீடுகளில் விரும்பி வளர்க்கும் விலங்குகளிலே பூனையும் ஒன்றாகும். பூனையை வீடுகளிலே வளர்க்கும் பழக்கம், வரலாற்றுக் காலத்துக்கு முன்புதொட்டு, எல்லா நாடுகளிலும் இருந்துவந்திருக்கின்றது. பூனையைப் பற்றிய ஒரு சில குறிப்புகள் பண்டைய தமிழ் இலக்கியங்களிலும், எகிப்திய—கிரேக்க—லத்தீன் மொழிகளின் பழம்பெரும் இலக்கியங்களிலும் ஆங்காங்கு காணப்படுகின்றன.

பூனையின் முகத்தில் விழிப்பது, பூனை குறுக்கே செல்லுதல், பூனை தும்முதல் போன்றவைகள், தமிழகத்தில் 'சகுனத்தடை'யாகக் கொள்ளப்பட்டுவருகின்றன. பூனையைத் தடவிக்கொடுத்தலும், அதனுடைய மயிரைக் கையால் தொட்டுக் கீழே விழும்படி செய்தலும் 'பாப காரியங்களாக' வைதிகர்களால் கருதப்படும். பூனையின் ஒரு மயிரைக் கீழே விழச் செய்தால், அந்தப் 'பாப கருமத்தை' நீக்கிக் கொள்ள பொன்னால் ஒரு மயிர் செய்து, அதனைப் பார்ப்பனருக்குத் 'தான'மாகக் கொடுக்கவேண்டுமென்பர்.

எகிப்திய நாட்டில் மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே, பூனை புனிதமான ஒன்றாகக் கருதப்பட்டுவந்தது. பூனை இறந்துவிட்டால், அதனை நறுமணப் பொருள்களால் பாடம் செய்து, 'பக்தி' உணர்ச்சியோடு, அதற்கென்று தனியாக அமைந்த கல்லறையில் புதைப்பார்களாம். எகிப்திய நாட்டுக் கடவுள்களிலே, ஒரு கடவுள் பூனையின் தலையினை தன் தலையின் வடிவமாகக் கொண்டுள்ளார்.

இங்கிலாந்தில் இடைக்காலத்தில், பூனைகளை மந்திரக்காரன் பட்டியலிலே சேர்த்து எண்ணி, வெறுப்புக்காட்டிவந்தனர். நாளடைவில் அப்படி மதிக்கும் தன்மை மாறி, இப்பொழுது, நல்ல 'அதிர்ஷ்டத்தைக்' கொடுப்பவைகளாகக் கருதப்பட்டு வருகின்றன.

பூனையைப் பொறுத்துப் பல்வேறு மூட நம்பிக்கைகள், எல்லா நாடுகளிலும், கட்டிக் காத்துக் கடைப்பிடிக்கப்படுகின்றன. இங்கிலாந்தின் கடற்கரைப் பகுதிகளில் வாழும் செம்படவர்களுக்குக், கடலினால் ஏற்படும் துன்பங்கள் விளையக்கூடாது என்பதற்காக, அவர்களது மனைவிமார்களால் பூனைகள் வளர்க்கப்பட்டன. பூனை தும்மினால், மழைவரும் என்பது அவர்கள் கொண்டிருந்த ஐதிகங்களிலே ஒன்று.

பூனைகளைப் பொதுவாக மதச்சடங்குகளுக்கு மாசு கற்பிக்கும் ஒன்றாகவே பெரும்பாலான இடங்களில் கருதப்படும்; கருதப்பட்டும் வந்தன. இடைக்காலங்களில் மேலைநாட்டில், எய்க்ஸ் (Aix) என்னுமிடத்தில் கொண்டாடப்பட்ட கார்பஸ் கிரிஸ்டி (Corpus Chirsti) என்னும் விழாவின்போது, சிறந்த அழகான ஆண் பூனை ஒன்றைப் பிடித்து, அதற்கு அழகான உயர்ந்த ஆடைகள் உடுத்தி, அதனை அணிசெய்யப்பட்ட தேரில் வைத்து வலமாகத் தெருக்கள்தோறும் அழைத்துச் செல்வது வழக்கம். அந்தத் தேர் வரும்போது, அதற்கு முன் முழங்கால்படியிட்டு மக்கள் எல்லோரும் வணங்குவார்களாம். எப்பொழுது தன்னை அவிழ்த்துவிட்டு, தனக்கு விடுதலை அளிப்பார்கள் என்பதிலே அந்தப் பூனை அதிக கவனம் செலுத்துமாம்.

பூனையைக் காட்டுப்பூனை என்றும், வீட்டுப் பூனை என்றும் இருவகைப்படும். காட்டுப்பூனை தான் பழக்கத்தின்வழி, உள்ளது சிறத்தல் என்ற முறைப்படி நாளடைவில் வீட்டுப்பூனையாக மாறிற்று. பூனை, புலி, சிறுத்தை, சிங்கம் போன்றவைகள் ஓரினப் பரம்பரையைச் சேர்ந்தவையாகும். வீட்டுப்பூனை சாதாரணமாக ஒரு அடி உயரமும், இரண்டு அடி நீளமும் உள்ளதாக இருக்கும். இது வீட்டிலிருப்பதால் இதனை 'இற்புலி' என்றும் வழங்குவது உண்டு. புலிக்குரிய உடல் வரிக்கோடுகள் பூனைக்குக் கிடையா. இது நீரில் செல்லாது; மரமேறும். புலி இவ்விரண்டினையும் செய்யாது. எலி, பறவை முதலியவற்றை வேட்டையாடி உண

வாகக் கொள்ளும். வேட்டை யின்மேல் தாவுவ தற்கு அதனுடைய வால் அதற்குப் பெரிதும் துணை செய்கிறது. பூனை இரவில்தான் நன்றாய்ப் பார்க்கும்; அப்பொழுதுதான் அதனுடைய கண்கள் நன்றாக ஒளிவீசும். பூனைகள் பொது வாக வெள்ளை, பழுப்பு, கறுப்பு முதலிய பல நிறங்களில் காணப்படும். கோபமடையும்போது இதன் நகங்கள் வெளித்தோன்றும்; பிற நேரங் களில் மறைந்துவிடும். சில நாட்டுப் பூனை களுக்கு உடலில் மயிர் நீண்டுவரும். ஓசை வரு வதைக் கூர்ந்து கவனித்து, உயிர்களை வேட்டை யாடும்.

காட்டுப்பூனை சிறுத்தைப்புலிக்கும், பூனைக் கும் நடுத்தரமான உருவமுடையதாக இருக் கும் கறுத்த நிறமும், கொடுமையான பார்வை யும் கொண்டதாக இருக்கும். பகலில் புதர் களில் பதுங்கி இருந்து, இரவில் இரைதேடப் புறப்படும். இது பறவை, கோழி, முயல், வாத்து முதலியவைகளை வேட்டையாடித் தின்னும். இது சிற்றூர்களிலும், சிற்றூர்களை அடுத்தக் காடுகளிலும் வாழும்.

வீட்டுப் பூனைகளில் மாங்ஸ் (Manx) வகை யும், சயாம் (Siamese) வகையும் மிக்கப் பேர் போனவைகளாகும். முதல் வகைப்பூனைகளுக்கு வால் இருப்பதில்லை. இரண்டாவது வகைக்கு பழுப்பு நிறத்தாடையும், நீலக்கண்களும் இருக்கும். இவைகள் வளர்ப்பவர்களிடத்தில் நன்கு பழகும் பண்புடையன.

சீனாவில் தொங்கும் காதுகளையுடைய பூனை வகை ஒன்று இருந்துவருகிறது. சீனமக்கள் இந்தவகைப் பூனைகளை, மிக்க கொழுக்க வளர்த்து, விருந்துகளில் கறியாக்கி உண் பார்கள்.

மடகாஸ்கர் மலேயாவிலுள்ள ஒருவகை பூனை முறுக்கின வாலினை உடையதாகும்.

பூனை திருட்டுப் பண்புபடைத்தது; எனவே தான் அதனைப் பொதுவாகத் 'திருட்டுப்பூனை' என்று சொல்வர். திருட்டுத்தனத்தோடு, ஏமாற்று வித்தை செய்து, பாசாங்கு செய்யும் வைதீகனை 'உருத்திராக்ஷப்பூனை' என்று சொல் வது பழமொழி.

சினம் கொண்ட காலத்தில், தன்னை வளர்த்த வளர்ப்புக்காரர்களையே கடிக்கும் பண்புகொண் டது. பூனை நன்றியறியாது; திருட்டுத்தனம் செய்யும்!

●●

புரட்சிக்காரனும் போர்வீரனும்

தென் அமெரிக்க நாடு ஒன்றில் புரட்சி தலைதூக்கியது. அதை அந்நிய ஏகாதி பத்தியம் மிக கடுமையான முறையில் நசுக்கிவிடப் பாடுபட்டது. அடக்குமுறைக் கோலத்திலே நாடு தத்தளித்தது.

ஒருமுறை புரட்சிக்காரர்களில் சிலர் அரசாங்கத்தினரால் கைது செய்யப் பட்டு, பெயருக்கு ஒரு விசாரணைக்குப்பின், தூக்குத்தண்டனை தரப்பட்டனர். புரட்சிக் காரர்கள், கைகள் பின்னால் கட்டப்பட்டு, அரசாங்கப் போர்வீரர்களால் நகரிலிருந்து நீண்ட தொலைவு அழைத்துச் செல்லப்பட்டனர்.

நடந்து களைப்படைந்த புரட்சிக்காரனொருவன், "இந்த அரசாங்கம் என்னைச் சுடத்தான் போகிறது. அதற்கு ஏன் இவ்வாறு பத்துமைலுக்குமேல் நடத்திச் சென்று, கஷ்டப்படுத்தவேண்டும்?" என்று கேட்டான்.

அதைக்கேட்ட, சுடப்போகும் போர்வீரர்களில் ஒருவன், "உன்னுடைய கஷ்டமாவது பத்துமைல் போனதும் தீர்ந்துவிடும். நான் பத்துமைல் திரும்ப நடந்து வந்து, தொடர்ந்து வாழவேண்டுமே!" என்று பதிலளித்தான்.

தீயோரின் பொய்ப்புரை !

[இரா. நெடுஞ்செழியன்]

கடற்கரையோரத்திலும் குளத்தின் அருகிலும், சாலையிலும் சோலையிலும் அவள் நடமாட்டத்தைக் காண்கிறான்; அவளது தோற்ற அழகைப்பருக, அவளை மீண்டும் மீண்டும் காண்கிறான்; அவளைக் காணும் இன்பம் பெற, காணக்கூடிய வழிகளிலெல்லாம் முயன்று காண்கிறான்! அந்த அளவுக்கு அத் தலைவியின் அழகு, அந்தத் தலைவனின் உள்ளத்தைக் கவர்கிறது!

அவள் எங்கெல்லாம் செல்கிறாளோ அங்கெல்லாம் சென்று, அவளைக் காணவும், அவளோடு பேசவும் அவாக்கொள்கிறான். அவள் குளத்திற்கு நீராடச் செல்கிறாள்; அவனும் அவளைத் தொடர்கிறான். அவள் நீராடுகிறாள்; அவளுக்கு எவ்வித தீங்கும் ஏற்படாதவண்ணம் கரையைச் சுற்றிச்சுற்றி வந்து காவல்புரிகிறான். ஒரு ஆணழகன் தன்னை உற்றுப்பார்ப்பதும், தன்னைக்கண்டு மயங்கிநிற்பதும், தன்னைத் தொடர்ந்து வருவதும், தனக்குக் காவல் புரிவதுமான செயல்களில் ஈடுபட்டிருப்பதை அவள் உணருகிறாள்; அவளையறியாமலேயே அவள் உள்ளமும் அவ்வாணழகன்மீது படிந்து விடுகிறது தனக்காக இவ்வளவு அரும்பாடு படுகிறானே அக்கட்டிளங்காளை, என்று எண்ணுந்தோறும் அவள் உள்ளப் பூரிப்பால் விம்முகிறது; பெருமிதங்கொள்கிறது. அவனோடு வாய்திறந்துபேச அவளுக்கு ஆவல்தான்; என்றாலும் நாணமும் மடப்பமும் அவள் வாயை அடைத்துவிடுகின்றன. தன் வாய்ச் சொல்லுக்காக அவன் ஏங்கிக்கிடக்கிறான் என்பதை அவள் நன்கு அறிகிறாள்.

கோரையைப் பறிக்க உப்பங்கழிக்குச் செல்கிறாள்; அவனும் உடன்போகிறான். அவள் கைசிவக்கச் சிவக்கக் கோரையைப் பறித்த வண்ணமிருக்கிறாள்; அவளுக்கு உதவியாக, அவள் கேட்காமலேயே, அவன், தானாகக் கோரையைப் பறித்து, அவள் அடுக்கிவைப்பதோடு வைக்கிறான். கோரையைக் கிழித்து, அதனைக் கொண்டு பெண் பதுமையொன்று செய்து, அவளிடத்தில் கொடுக்கிறான். இதை அவளோடு பேசுவதற்கான வாய்ப்பாகப் பயன்படுத்திக்கொள்கிறான். அவளும் அன்போடு அதனைப் பெற்றுக்கொண்டு பாராட்டிப் பேசுகிறாள். காதலுள்ளங்கள் ஒன்றோடொன்று கலக்கின்றன!

பின்னர் அவள் வீட்டிற்கே அடிக்கடி வருகிறான். அவளுக்கும் ஏனையோர்க்கும் உதவியாக இருக்கும்படியான சிறுசிறு வேலைகளையெல்லாம் செய்கிறான். அவன்மீது அவளுக்கு ஏற்பட்டிருந்த காதல் நாளுக்கு நாள் வளர்கிறது. அவள் தன் உடம்பை அழகுபடுத்திக் கொள்ள முயலும்போது, அவன், அவளுக்கு உதவியாக இருந்து, வண்ணக் குழம்புகளால், அவளது உடலில் ஓவியங்கள் தீட்டுகிறான். இப்படிக் களவு ஒழுக்கத்திலே அவர்கள் காதல் வளர்ந்துவருகிறது!

மணந்துகொள்ளவேண்டும் என்ற விருப்பம் இருவர்க்கும் உண்டு. ஆனால், ஏதோ காரணங்களால் மணம் முடித்துக்கொள்ளும் காலம் நெருங்காமலிருக்கிறது. அவர்கள் இருவரும், ஒருவர்க்கொருவர், காதலுள்ளத்தைப் பரிமாறிக்கொண்டாலும், மணம் நிகழாத காரணத்தால், கூடிமுயங்கி இன்பம் நுகரும் வாய்ப்பு அவர்களுக்கு ஏற்படாமலேயிருக்கிறது. தலைவன் விரைவில் மணம் முடிக்கதற்கான முயற்சிகளில் ஈடுபடாமலிருப்பது குறித்துத், தலைவி சில சமயங்களில் அவனோடு ஊடல் கொள்வதும் உண்டு. மணம் முடிப்பதற்கான முயற்சிகளில் ஈடுபடவேண்டிய பொறுப்பு, தலைவியை விட தலைவனையே மிகச்சார்ந்ததாகையால், அதை அவனிடம் எதிர்பார்க்கிறாள் தலைவி.

நிலைமை இவ்வாறாக இருக்க, ஊரிலுள்ள சில வம்பளக்கும் பெண்கள், அவ்விளைஞனுக்கும் இளையோளுக்கும் கள்ளத்தனமான கூட்டம் உண்டு என்ற வதந்தியைக் கிளப்பிவிடுகின்றனர். பிறரைப் பற்றிக் குற்றங்குறை கூறிக் கொண்டிருப்பதே அவர்களது பொழுது போக்கு. தலைவியின் அணிகளைப் போடவேண்டிய முறைப்படித் திருத்தம் செய்துபோட்டும், தலைவி நீராடும்போது அவளுக்குத் துன்பம் ஏதும் அணுகாவண்ணம் பாதுகாப்பு அளித்தும், உடலில் வண்ணக் குழம்பால் ஓவியம் எழுதியும், தலைவியின் வீட்டில் அவள் இடும் ஏவல் தொழில்களையெல்லாம் செய்தும் அவளுக்குத் தலைவன் மகிழ்ச்சியூட்டி வருவதைக் கண்ட அந்த வம்புமகளிர், அவர்கள்மேல், குசுகுசுவென்று கதைகள் கட்டிவிடுகிறார்கள். தலைவனுக்கும் தலைவிக்கும் கள்ளக்கூட்டம் உண்டு என்று ஊரிலுள்ளார் மறைவாகப் பேசிக் கொள்வதைத் தலைவியின் தோழியொருத்தி கேட்டுவிடுகிறாள். தலைவியின் நற்பெயருக்கு இழுக்கு ஏற்பட்டுவிட்டதே என்று வருத்தப் பட்டுக்கொண்டு, தலைவியைப் பார்க்க அவள் வருகிறாள்.

“ஏடி, தோழி! ஏன் வருத்தமாக இருக்கிறாய்!”

“வருத்தமா? எல்லாம் உன்னைப்பற்றித் தான்!”

“என்னைப்பற்றி உனக்கென்னடி வருத்தம்? நான் ஏதேனும் கடிந்துரைத்தேனா; கேலி பேசினேனா?”

“நீ பேசவில்லையடி! ஊரார் உன்னைப்பற்றிக் கேலி மொழி பேசுகின்றனர்!”

தலைவி திடுக்கிட்டு, “என்னைப்பற்றியா? ஊரார் கேலிபேசும்படி நான் என்ன செய்தேன்? ஏன் கேலி பேசவேண்டும்?” என்று பதைபதைப்புடன் கேட்கிறாள்.

“நீ ஒன்றும் செய்யவில்லையா?”

“என்னடி செய்தேன்?”

“நீ நமது வீட்டிற்கு வருகிறானே, அந்த இளைஞனுடன் களவொழுக்கம் கொண்டிருக்கிறாயே, இது முறையா? உன்னைப்போன்ற உயர்குடிப் பெண்களுக்கு இது ஆகுமா?”

“ஏடி, நீ சொல்கிறாயா? அல்லது ஊரார் சொல்கிறார்களா, இப்படி?”

“நானாகச் சொல்லவில்லை! ஊரார் சொல்லுவதைத்தான் சொல்லுகிறேன்!”

“யார், ஓயாமல் அலர் தூற்றிக்கொண்டிருப்பார்களே, அவர்களா சொல்லினார்கள்?”

“யாராயிருந்தால் என்னடி! நீ அப்படிச் செய்யலாமா?”

தலைவி கண்கலங்கிய வருத்தத்தோடு, தோழியைக் கட்டிக்கொண்டு, பின் தோழியின் கையைப்பிடித்துக், கையிலுள்ள நகைகளை மேலும் கீழுமாகத் தள்ளிக்கொண்டே, “யான் சொல்வதைக் கேளடி! பிறகு நீ உண்மையை அறிவாய்!” என்று கூறுகிறாள்.

“உண்மையில் அப்படி இல்லையாடி?” என்று வினவுகிறாள் தோழி.

“எப்பொழுதும் யார் மேலாவது அலர் தூற்றிக்கொண்டிருப்பதையே தொழிலாகக் கொண்டவர்கள், கூறிய கூற்றைக் கேட்டுக் கொண்டு வந்து, நீ என்னிடத்தில் கேட்கிறாய்! ஏதாவது வதந்தியைக் கிளப்பாவிட்டால், அவர்களுக்குப் பொழுது போகாது. வதந்திக்கு ஏதாவது கிடைக்காவிட்டால், அவர்கள் மிகவும் வருத்தப்படுவார்கள். அப்படிப்பட்டவர்கள் ஆராயாமல் ஐயுற்றுக் கூறிய சொற்களை, நீயும் அப்படியே நம்பிவிட்டாய்' அந்தக் கூற்று இவளைப் பொறுத்துப் பொருந்தாது என்று நீ அறியாமற்போன காரணந்தான் தெரியவில்லை! அன்று என்னுடைய சிவந்த விரல் மேலும் சிவக்கும்படியாக, நீண்டநேரம் நான் கோரையைப் பறித்துக்கொண்டிருந்த போது, கடல்நீர் வந்து ஏறின உப்பங்கழியிடத்திலுள்ள தாண்டன் கோரையைப் பறித்து, அதனால் பாவையொன்று செய்து, அதனை என்னிடம் அவன் கொடுத்தச் சிறு உதவியை வைத்துக்கொண்டு நீயும் ஐயப்படுகிறாயோ?” என்று தலைவி உருக்கமாகக் கேட்கிறாள்.

“ஊர்ப் பெண்கள் ஒருவர் மாற்றி ஒருவர் கூறிய காரணத்தால்தான், உண்மை நிலையறிய உன்னிடம் வந்தேன்” என்று தோழி மறுமொழி பகர்கிறாள்.

“ஏடி! அவர்கள் மிகக்கொடியவர்கள் என்று ஊர் மக்களாலேயே கைவிடப்பட்டவர்களல்லவா? அவர்கள் கூறுவதில் தீது இருக்கின்றது என்று உணரக்கூடிய ஆற்றல், உனக்கில்லாமலா போய்விட்டது? அவர்கள் கூறிய

சொல் பொய்யாகும்படி, நீயல்லவா அங்கே அதனைத் தவிர்த்திருக்கவேண்டும்! அதனைச் செய்யாமல், நீ என்னைச் சினந்துகூற இங்கே வந்திருக்கிறாயே, இது சரியா? நான் அன்று குளத்திற்குள் இறங்கி பூப்பறிக்க முடியாமல் அச்சங்கொண்டு மீண்டுவிட்டபோது, குளத்தில் இறங்கி, மலரைப் பறித்துப் புற இதழை ஒடித்து, அதனை அவன் என்னிடத்தில் கொடுத்த சிறு உதவியைக் காரணமாக வைத்துக் கொண்டு, நீயும் என்னை ஐயப்படுகிறாயோ?''

"அந்த வம்பு மகளிர் கூறிய சொல்லைக் கேட்டவுடன், நான் அஞ்சிப்போய்விட்டேன். அதனால்தான் உன்னிடத்தில் ஓடிவந்தேன் உண்மை தெரிய!''

"ஏடி, தோழி! அந்த மகளிர் என்னைப்பற்றித் தவறாகக் கூறுகிறார்கள் என்றால், நம்மைக் காத்துக்கொண்டிருக்கிற ஆயத்தாரின் காவல் பொய்யாக வேண்டுமே! இவ்வூரார் பல தடவைப் பொய்யாகக் கூறிய கூற்றை நீயல்லவா பொய்யென்று முதலில் உணர்ந்திருக்க வேண்டும்! அப்படிக்கில்லாமல், இவளுக்கு அந்தக் கூற்று பொருந்தும் என்று கருதிக் கொண்டு, மனங்கலங்கியவளைப்போல, நீ இங்கு வந்திருப்பது எனக்கு வேடிக்கையாக இருக்கிறது! அன்று, நான் தொய்யில் உடம்பில் எழுதச் சரியாக அறியமாட்டேன் என்று சொல்லி, அவன் என் வளைந்த முன்கையைப் பற்றிப் பிடித்து நல்ல மூங்கில்போன்ற எனது தோளில் தொய்யில் குழம்பில் கரும்புபோல் எழுதியும், மற்றும் எழுதுவதற்கு உரிய இடங்களிலெல்லாம் பல ஓவியங்கள் எழுதியும் எனக்குச் செய்த அச்சிறு உதவியைக் காரணமாக வைத்துக்கொண்டு நீயும் ஐயப்படுகிறாயோ?'' என்று கூறுகிறாள் தலைவி.

"ஊரார் சொல்லுவதால்தானே நான் அதைப்பற்றி அஞ்சவேண்டியிருக்கிறது. இது மறைபொருளாக இல்லாமல், அம்பலப்படுத்தப் பட்டுவிட்ட காரணத்தால்தானே நான் உன்னைக் கேட்கவேண்டியேற்படுகிறது'' என்கிறாள் தோழி.

அதுகேட்ட தலைவி, "நான் இவ்வளவு தொலைவு உனக்குக் கூறவேண்டிய அளவுக்கு, நீ ஊரார் பேச்சில் மயங்கியிருக்கிறாய்! உன் நெஞ்சிடத்தில் ஏற்பட்ட இந்த ஐயப்பாட்டை, என்றால், இனித் தெளிவிக்க முடியாது என்றே கருதுகிறேன். என்னுடைய திருமணத்தன்று நம் சுற்றத்தார் கூடியிருந்து அறிந்துகொள்ளப்போகிற செய்தியை, இவ்வூரார் இன்றே பேசி மகிழ விரும்புகிறார்களாயின், அதற்கு நாம் என்ன செய்யமுடியும்?'' என்று நிலைமைக்கு வருந்தியும், காதலன் மணமுடிக்க வரவில்லையே என்று துயருற்றும் தலைவி கூறுகிறாள்; ஆனாலும் தான் ஒழுக்கந் தவறவில்லை என்ற உறுதிப்பாட்டில், ஊரார் சொல்லைப் பற்றிக் கவலைப்படாமல் இருக்கிறாள்.

தோழியும் தலைவியின் உள்ளத்தை அறிந்து, அவளது ஊடலைத் தீர்த்துவைக்கத் திருமணத்திற்கான காலத்தை விரைவுபடுத்த முயலுகிறாள்!

* * *

இது மருதக்கலியின் 11-ம் செய்யுளில் காணப்படும் கருத்தைத் தழுவித் தீட்டப்பட்ட காதற்காட்சியாகும். ஆசிரியர் மருதனிள நாகனார், இச்செய்யுளில், உண்மைக்குப் பரிந்து, உறுதியுடனும் தெளிவுடனும் பேசும் தலைவியின் மாண்பைச் சிறப்புற விளக்கிக் காட்டியுள்ளார். தலைவன் தலைவியர் மணம் ஆகாதவரையில் மனத்தால் மட்டும் கலந்து கொண்டும், மணமானபின்பு உடலால் கலந்து கொண்டும் வாழும் மாண்பைப் போற்றிவந்தனர், என்பது இச்செய்யுளால் நன்கு அறியப்படுகின்றது. ஊரார் வதந்தி கிளப்பிவிடும் நிலையிலும், தலைவன் மணந்துகொள்ள முனையாமல் இருப்பது தலைவிக்கு ஊடலுக்குக் காரணமாகிவிடுகிறது.

* * *

புனை இழை நோக்கியும் புனல் ஆடப் புறஞ்சூழ்ந்தும்
மணிவரி தைஇயுநம் இல்வந்து வணங்கியும்
நினையுபு வருந்து(ப்)இந் நெடுந்தகை திறத்(து)இவ்வூர்
இனைய(ள்)என்(று) எடுத்(து)ஓதற்(கு) அனையையோ நீஎன
வினவுதி ஆயின் விளங்கிழாய் கேளினி;

செவ்விரல் சிவப்(பு)ஊரச் சேட்சென்றாய் என்(று)அவன்
பௌவநீர்ச் சாய்க்கொழுதிப் பாவைதந்(து) அணைத்தற்கோ
கௌவைநோய் உற்றவர் காணாது கடுத்தசொல்
ஒவ்வாஎன்(று) உணராய்நீ ஒருநிலையே உரைத்ததை;

ஒடுங்கியாம் புகல்ஒல்லேம் பெயர்தர அவன்கண்டு
நெடுங்கயம் மலர்வாங்கி நெறித்துத்தந்(து) அணைத்தற்கோ
விடுந்தவர் விர(கு)இன்றி எடுத்தசொல் பொய்யாகக்
கடிந்ததும் இலையாய்நீ கழறிய வந்ததை ;

வரிதேற்றாய் நீஎன வணங்(கு)இறை அவன்பற்றித்
தெரிவேய்த்தோள் கரும்(பு)எழுதித் தொய்யில்செய்து அணைத்தற்கோ
புரிபுநம் ஆயத்தார் பொய்யாக எடுத்தசொல்
உரி(து)என உணராய்நீ உலமந்தாய் போன்றதை ;

எனவாங்கு,

அரி(து)இனி ஆயிழாய் அதுதேற்றல் புரி(பு)ஒருங்(கு)
அன்றுநம் வதுவையுள் அமர்செய்வ(து) இன்(று)ஈங்கே
தா(ன்)நயந்(து) இருந்த(து) இவ்வூர்ஆயின் எவன்கொலோ
நாம்செயற் பால(து) இனி.

—(மருதக்கலி-11)

[புனைஇழை - நன்கு செய்யப்பட்ட நகைகள் ; நோக்கியும் - திருத்தி அணிவித்தும் ; மணிவரி - அழகிய தொய்யில், தைஇ - எழுதி ; வணங்கியும் - ஏவல்தொழிலைச் செய்தும் ; நினையுபு - நினைந்து ; கௌவை நோய் - வருத்தம் ; கடுத்தசொல் - கூறிய சொல் ; ஒவ்வா - பொருந்தா ; பௌநீர் - கடல்நீர் ; சாய்க்கொழுதி - வந்து ஏறின உப்பங்கழியினிடத்து ; விடுந்தவர் - கைவிடப்பட்ட மகளிர் ; விரகு - உபாயம் ; புரிபு - காக்கின்ற ; உலமந்தாய் போன்றதை - மனங்கலங்கியவரைப்போல இருந்தது ; வரி - தொய்யில் ; வணங்குஇறை - வளைந்த முன்கை ; வேய் - மூங்கில் ; கரும்பு எழுதி - கரும்புபோல் ஓவியம் எழுதி ; ஆயிழாய் - ஆராயப்பட்ட அணிகளை அணிந்தவளே ; தேற்றல் - தெளிவித்தல்.

அலர் என்பது ஊரிலுள்ள வெட்டிப் பெண்கள், பிறரைப் பற்றிக், குசுகுசுவென்று, இல்லது பொல்லாது பற்றிப் புனைந்து கூறிடும் வதந்தி ஆகும்.

தொய்யில் என்பது வண்ணக் குழம்புகளால் பெண்களின் உடலில் அழகு தோன்ற வரையப்படும் ஓவியமாகும்.]

அதிசயம்— ஆனால் உண்மை

ஆள் ஆஜர்—ஆனால் வாக்கு அளிப்பதில்லை

இலண்டனிலுள்ள யூனிவர்ஸிட்டி காலேஜ் ஹாஸ்பிடலின் போர்டு கூட்டத்தில், ஜெர்மி பென்தாம் என்பார் தலைமை தாங்கியவண்ணம், சென்ற நூறு ஆண்டுக்காலத்திற்கு மேலாக அமர்ந்து வருகிறார்; ஆனால் வாக்கு அளிப்பதில்லை! யூனிவர்ஸிட்டி காலேஜ் ஹாஸ்பிடலை 1827-ம் ஆண்டு அவர் தோற்றுவித்தார். டிரஸ்ட் ஃபோர்டின் முதற் கூட்டங்களுக்கு அவர் தலைமைதாங்கினார். அவர் 1832-ம் ஆண்டு இறந்துவிட்டபோதிலும், அவர்தான் இன்னமும் தலைமைதாங்கிவருகிறார். ஜெர்மி பென்தாம் இறக்கும்போது, தம்முடைய உடலைப் பாடம்பண்ணி, போர்டு கூட்டத்தின் தலைமையிடத்தில், அதனை இறுத்திவைக்க வேண்டும் என்று உயில் எழுதிவைத்தாராம். அதன்படி அவர் உடலம் பாடம் செய்யப்பட்டு, அவர் உயிரோடு இருந்தால், எப்படி இருப்பாரோ, அப்படியே ஆடை அலங்காரம் செய்யப்பட்டு, தலைமை நாற்காலியில் எப்பொழுதும் அமர்த்தப்பட்டுள்ளார். போர்டு கூட்டத்தில் ஏதாவது பிரச்சினை வந்து, வாக்கு எடுக்கும் நிலைமை ஏற்பட்டால், ஜெர்மி பென்தாமும் கலந்து கொள்வதாகக் கருதப்படுமாம். அவர் வாய் திறந்து பேசாமலிருக்கவே, "ஆள் ஆஜர்—ஆனால் வாக்கு அளிக்கவில்லை" என்று எழுதிக் கொள்ளப்படுமாம். இந்தப் பழக்கம் சென்ற நூற்றாண்டு காலத்திற்கு மேலாகத் தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

ஏசுவின் பிறப்பு

ஏசு கிருஸ்து கி. பி. முதல் நூற்றாண்டில் முதல் ஆண்டில் பிறந்ததாக இப்பொழுது கணக்கிட்டுக்கொள்கிறோம். ஆனால் அவருடைய பிறந்தநாளைப்பற்றி ஆராய்ச்சி செய்து, முடிவுகட்டியவர்கள், அவர் கி. மு. நான்காம் ஆண்டில்தான் பிறந்தார் என்று கூறுகின்றனர். கி. பி. ஆறாம் நூற்றாண்டில் வாழ்ந்த தலைமுறைத் தொகுப்பாளர் ஒருவர், தவறாகக் கணக்கிட்டுவிட்டதே, காரணம் என்று சொல்லப்படுகிறது.

நீரோ பிடில் வாசிக்கவில்லை

ரோம் நகரம் தீப்பற்றி எரியும்போது, நீரோ என்ற மன்னன் பிடில் வாசித்துக்கொண்டிருந்ததாகச் செய்தி வழங்கப்படுகிறது. உண்மையில் அந்நிகழ்ச்சி நடைபெறவில்லை என்ற கருத்து, சில வரலாற்றாசிரியர்களால் வெளியிடப்பட்டுள்ளது. முதலில், நீரோ மன்னன் வாழ்ந்த காலத்தில் பிடில் கண்டுபிடிக்கப்படவில்லை என்ற கருத்து நிலைநாட்டப்படுகிறது. இரண்டாவதாக, டாஸிடஸ் என்ற பழங்கால ரோம வரலாற்றாசிரியர், ரோம் நகரம் தீப்பற்றி எரியும்போது, நீரோ, ஐம்பதுமைல்களுக்கு அப்பால், ஆண்டியம் என்ற அவனது மாளிகையில் தங்கியிருந்தான் என்றும், நெருப்புத் தணிந்து எல்லாம் சாம்பலாக ஆகும் காலத்திற்குள், அவன், ரோம் நகரம்வந்து சேரவில்லை என்றும் குறிப்பு எழுதிவைத்துள்ளார் என்ற கருத்து துணைக்கழைக்கப்படுகிறது.

பிச்சைக்காரர் செய்தித்தாள்

பாரீஸ் நகரில் பிச்சைக்காரர் படிப்பதற்கென்று "கெஜட் டெஸ்மெண்டியாட்ஸ்" என்ற செய்தித்தாள் வெளியிடப்படுகிறது.

செய்தியின் விரைவு

நடு இரவில் நடந்த ஒரு கொலையைப் பற்றிய செய்தியை, ஒவ்வொருவரும், பன்னிரண்டு நிமிடத்திற்குள்ளாக வேறு இரண்டு பேர்களிடத்தில் சொல்லிவிடுவது என்று ஆரம்பித்தால், பொழுது விடிவதற்குள், அந்தச் செய்தி, உலகம் முழுவதும் பரவி, எல்லோரும் அறிந்தவர்களாகிவிடுவார்கள்.

147 ஆண்டு மணவாழ்க்கை

உலகிலேயே மிக நீண்ட மகிழ்ச்சியான மண வாழ்க்கையை நுகர்ந்தவர்கள் ஜானஸ் ரோவன் —சாரா தம்பதிகளாவர். அவர்கள் இருவரும் மணவாழ்க்கையை மட்டும் 147 ஆண்டுகள் இடைவிடாமல் கழித்திருக்கிறுர்கள். மண வாழ்க்கையின் மூன்ருவது பொன்விழாவைக் கொண்டாடும் அளவுக்கு வாழ்ந்துவிட்டார்கள். அவர்கள் இருவரும் ஹங்கேரி நாட்டைச் சேர்ந்தவர்கள். ஜானஸ் ரோவன் 172 வயது வரையிலும், சாரா 164 வயது வரையிலும் உயிர்வாழ்ந்து இறந்துபட்டனர். அவர்கள் இரு வரும் 1825-ம் ஆண்டு, ஒரே நாளில் இறந்து போயினர். அவர்கள் இறக்கும்போது அவர் களுடைய 116 வயது மகனும், இரண்டு பேர னுக்குப் பேரனுக்குப் பேரர்களும் படுக்கை அருகில் இருந்தார்களாம்.

ஃ ஃ ஃ

இரத்த மழை

ஐரோப்பாவின் மத்தியதரைக் கடலையொட் டிய நாடுகளில், அடிக்கடி இரத்த மழை பெய்யும் செய்தி கேட்கப்படும். மழை இரத்தம்போல் செந்நிறமாக இருக்கும். முன்காலத்திலெல்லாம் இப்படிச் செந்நிறமழை பெய்யும்போதெல்லாம், உலகம் முடிந்துவிட்டதன் அறிகுறி அது என் றும், அது ஆண்டவனின் கோபத்தைக் காட் டுவதாகும் என்றும் கருதி, ஆண்டவனுக்குப் பலியிடத் தொடங்குவர். இந்த இரத்த மழை பற்றிய செய்தி ஹோமர், வர்ஜில், புளூடார்ஸ் போன்றவர்களின் இலக்கியங்களிலும் கூறப்பட் டுள்ளது. அறிவியல் ஆராய்ச்சி வளர்ந்துள்ள இந்த நாட்களில், அதன் காரணம் என்ன வென்று கண்டுபிடிக்க முயன்றபோது, சகாரா பாலைவனத்தின் செம்மண், காற்றடிப்பதன் காரணமாக மேகமண்டலத்தில் புகுந்துவிடுவ தால், மழை பெய்யும்போது செந்நிறம் தோன்றுகிறது என்று தெளிவுபெறப்பட்டது.

ஃ ஃ ஃ

1792 குடும்பம்

1792 என்பது எண்ணல்ல; ஒரு குடும்பத் தின் பெயர். பிரான்ஸில் செளலோம்மியர்ஸ் என்ற ஊரில் 1792 குடும்பம் வாழ்ந்தது. அந் தக் குடும்பத்தில் நான்கு பிள்ளைகள் இருந்தார் கள். அவர்களுக்கு முறையே ஜனவரி 1792, பிப்ரவரி 1792, மார்ச் 1792, ஏப்ரல் 1792 என்று பெயர். மார்ச் 1792 என்பார் செப்டம் பர் 1904-ல் இறந்துபட்டார்.

ஃ ஃ ஃ

மிகச்சிறிய புத்தகம்

ஒரு சதுர அங்குலத்தின் பதினுறில் ஐந்து பகுதி அளவுகொண்ட புத்தகத்தில், உமர் காயம் எழுதிய "ரூபயாத்" முழுவதும் அடக் கப்பட்டிருக்கிறதாம். இந்தப் புத்தகத்தை நியூயார்க் நகரில் பி. எஸ். லாங் என்பவர் கொண்டிருக்கிறுர்.

ஃ ஃ ஃ

காதுக்குக் குறைவு கண்ணுக்கு நிறைவு

கிழக்கிந்திய அரசன் ஒருவனுக்கு அடிமை யொருவன் சதுரங்க ஆட்டப் பலகை ஒன்று செய்துகொடுத்தானும். அந்தப் பலகையைப் பெற்றுக்கொண்டு மகிழ்ந்த அரசன், அந்த அடிமை எதை விரும்புகிறுனே, அதைச் சன்மானமாகத் தர ஒப்புக்கொண்டானும். அந்த அடிமை சதுரங்கப்பலகையிலுள்ள கட் டங்களில், முதல் கட்டத்தில் ஒரு கோதுமை மணியை வைத்து, இரண்டாவது கட்டத்தில் அதனை இரட்டிப்பாக்கி, மூன்ருவது கட்டத் தில் முந்திய கட்டத்தில் வைத்ததை, மீண்டும் இரட்டிப்பாக்கி, இப்படியே இரட்டிப்பாக்கிக் கொண்டே சென்று எல்லாக் கட்டங்களையும் நிரப்பித்தரவேண்டும் என்று கேட்டுக்கொண் டானும். அரசன் இது மிக எளிதானதுதான் என்று எண்ணிக்கொண்டு, அவ்வாறே கொடுக் கச் சம்மதித்தானும். சில கட்டங்களை நிரப் பிக்கொண்டு போகும்போதே தன்னுல் சமா ளிக்கமுடியாது என்று கண்டுகொண்டான். உலகம் முழுவதும் தனதாக்கிக்கொண்டு, வாழ் நாள் முழுவதையும் செலவழித்தாலும், அவ்வ ளவு மணிகள் சேர்க்கமுடியாது என்பதைக் கண்டுகொண்டான். ஏனெனில், பலகை முழுவதும் நிரப்பவேண்டுமானுல், 18446744737095551615 கோதுமை மணிகள் தேவைப்படும்.

:: தையற்கலை ::

[கே. பி. சுந்தரம் G. C. T.]

பஞ்சாபி ப்ளவுஸ்

பெண்களில் சிலர் அணிகின்ற முழுநீளக் கையுள்ள பஞ்சாபி ப்ளவுஸே இது. வடநாட்டில்தான் பெரும்பாலும் அணியப்படுகிறது. இந்த உடை முழங்கால் வரை ஜிப்பா போன்றிருக்கும் கால்சட்டையுடன் அணியும் ஒருவித மேலாடையேதான் கீழே விளக்கப்பட்டுள்ள பஞ்சாபி ப்ளவுஸ்.

அளவுகள்

இடுப்புவரை முதுகுநீளம்	14½	அங்.
முழுநீளம்	36	,,
பாதித் தோள்	6½	,,
கைநீளம்	23	,,
மார்பு சுற்றளவு	34	,,
இடுப்பு சுற்றளவு	28	,,
முன்னங்கை (லூஸ்) சுற்றளவு	10	,,
கழுத்து (தலை சுற்றளவு +1)	22	,,

1-ல் இருந்து 0 வரை 36½ அங்.
(முழு நீளம்+½அங்)

2-ல் இருந்து 0 வரை 7½ அங்.
(¼ மார்பளவில் 1 அங். குறைவு)

3-ல் இருந்து 0 வரை 14¾ அங்.
(இடுப்புவரை முதுகுநீளம்+ ¼ அங்.)

4-ல் இருந்து 0 வரை 3 அங்.

5-ல் இருந்து 0 வரை 6¾ அங்.
(பாதித்தோள் +¼ அங்.)

6-ல் இருந்து 5 வரை ¾ ,,

7-ல் இருந்து 6 வரை நேர்க்கோடு இணைக்க.

8-ல் இருந்து 2 வரை 10 அங்.
(¼ மார்பு+1½ அங்.) 8 லிருந்து 2 வரை இணைப்பு.

9-ல் இருந்து 3 வரை 9½ அங்.

10-ல் இருந்து 1 வரை 13½ ,,
(¼ மார்பு+5 அங்.)

11-ல் இருந்து 0 வரை 6 ,,

12-ல் இருந்து 4 வரை 3½ ,,

13-ல் இருந்து 0 வரை 1¼ ,,

14-ல் இருந்து 7 வரை 1½ ,,

15-ல் இருந்து 14 வரை ¾ ,,

16-ல் இருந்து 10 வரை ¾ அங்.
(16, 17 எண் வரை முன்பக்கம் இணைப்பு)
(1, 16 எண் வரை பின்பக்கம் இணைப்பு)

17-ல் இருந்து 18 வரை ½ அங்.
(பின்பக்கத்தைவிட முன்பக்கம் நீளம் ½ அங். அதிகம்)

18-ல் இருந்து 1 வரை ½ அங்.
(முன்பக்கம் ½ அங் லூஸ் அதிகம். பின் பக்கத்தைவிட)

19-ல் இருந்து 11 வரை ½ அங்.
(முன்பக்கம் ½ அங் லூஸ் அதிகம் பின் பக்கத்தைவிட)



20-ல் இருந்து 16 வரை $8\frac{1}{2}$ அங்.
($\frac{1}{4}$ மார்பளவு)

K-ல் இருந்து 10 வரை 6 அங்.(பாட்டம்ஷேப்)

A-ல் இருந்து 9 வரை 3 ,,

B-ல் இருந்து 9 வரை 3 ,, (சைட் ஓப்பன். பக்கவாட்டில் திறப்பு ஒருபக்கம் மட்டும் அமைக்கவும்)

3-க்கும் 9-க்கும் மத்தியில் டக் அமைக்க வேண்டும். நீளம் 7 அங், அகலம் $\frac{1}{2}$ அங். பின் பக்கம் இரண்டு டக்குகளும், முன்பக்கம் இரண்டு டக்குகளும் அமைக்க வேண்டும்.

17, 18, 11, 12. 4, 6, 14, 8, 9, 20, 16, 17 எண்கள் முன்பக்கம் இணைப்பவைகள்.

1, 13, 4, 6, 15, 8, 9, 20, 16, 1, எண்கள் பின்பக்கம் இணைப்பவைகள். 16-க்கும் 10-க்கும் கீழ் உள்ள $\frac{1}{2}$ அங்குல கோட்டின்மீது K வரை வெட்டி எடுத்துவிடவும், கீழ்ப்பக்கம் (பாட்டம்) ரவுண்டு வடிவம்போன்று அமைவதற்கு.

20, 16 எண்கள் உள்ள இடத்தில் சைட் ஓப்பன் அமைக்கவும். நடக்கும்போது வசதியாக இருப்பதற்காக இது அமைந்துள்ளது. A, B எண்கள் உள்ள இடத்தில் திறப்பு அமைத்து பட்டன் கட்டவேண்டும். அணியும் பொழுது இறுக்கப் பிடிக்காமலிருப்பதற்கே இந்த ஓப்பன் வைப்பது, திறப்பு இல்லாமலும் அணிபவர்கள் சிலர் உண்டு. அவர்களுக்கு திறப்பு இல்லாமலும் வெட்டித் தைக்கலாம்.

பஞ்சாபி ப்ளவுஸ் கை

1-ல் இருந்து 0 வரை $25\frac{1}{2}$ அங்.
(முழுநீளம் + 2 அங். தோள் பக்கம் மடிப்புக்காக, தையலுக்காக + $\frac{1}{2}$ அங்.)

2-ல் இருந்து 0 வரை $6\frac{3}{4}$ அங்.
($1/_8$ மார்பளவு + $2\frac{1}{4}$ அங்.)

3-ல் இருந்து 2 வரை $7\frac{1}{2}$,,
($\frac{1}{4}$ மார்பளவில் 1 அங். குறைவு.)



3-ல் இருந்து 0 வரை சாய்வுக்கோடு இ[illegible]

4 ல் இருந்து 1 வரை $5\frac{1}{4}$ அங்.
(முன்னங்கை லூஸ் + $\frac{1}{4}$ அங். தையலுக்காக)

5-ல் இருந்து 0 வரை 3 அங்.
6-ல் இருந்து 5 வரை $3\frac{1}{2}$,,
7-ல் இருந்து 6 வரை $\frac{1}{2}$,,
8-ல் இருந்து 5 வரை $\frac{3}{4}$,,
A-ல் இருந்து 7 வரை $\frac{3}{4}$,,

4, 1 எண்கள் வரை புள்ளிகள் உள்ள வளைவு போன்று முன்னங்கை பட்டி (பால்சன்) 2 அங். அகலத்தில் திருப்பித் தைக்கவும். முன்னங்கையில் திறப்பு (ஓப்பன்) இல்லை. (கப்பு வேண்டுமானால் கப்பு அகலம் குறைத்துக் கப்பு அமைத்துக்கொள்ளவும். விளக்கப்படத்தின் வடிவம் போன்று அமைந்துள்ளனவா என்று ஒத்திட்டுப்பார்த்து பிறகு வெட்டத் தொடங்கவும்.

படம் தைப்பதற்கு $\frac{1}{4}$ அங்குலம் சேர்த்து வரையப்பட்டுள்ளது.

குறிப்பு : இங்கு விளக்கப்பட்டுள்ள பஞ்சாபி ப்ளவுஸ் முழுநீளக் கையுடையது. இதிலிருந்து அரைக்கையுடைய பஞ்சாபி ப்ளவுஸும் காலருடைய பஞ்சாபி ப்ளவுஸும் மற்றும் பலவித மாற்றங்களுடன் (அணிபவர்களின் விருப்பப் படி) அமைத்துக்கொள்ளலாம்.

திருத்தம் : 14-வது இதழில் 22-ம் பக்கத்தில்
8-ல் இருந்து 10 வரை $9\frac{1}{2}$ அங். என்பதை
8-ல் இருந்து 9 வரை $9\frac{1}{2}$ அங். என்று
திருத்திப் படித்துக்கொள்க.

சந்தாதாரர்களுக்கு

சந்தாதாரர்கள் எழுதும் கடிதங்களில் சந்தா எண்களைக் குறிக்க வேண்டுகிறோம்.

சந்தா விபரம்

	உள்நாடு	வெளிநாடு
ஆண்டுக் கட்டணம்	6—0—0	7— 8—0
ஆறுமாதம் ,, ,,	3—0—0	3—12—0
தனி இதழ் ,, ,,	0—4—0	0— 5—0

Regd. No. M 6296

N. Kathiravan

ஆதரவாளர்க்கு

“மன்றம்” திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு உறுதுணையாக நின்று, அரசியல்—பொருளியல்—சமூகவியல்—கலையியல்—அறிவியல்— இலக்கியவியல்—பொதுவியல் ஆகிய பல்வேறு துறைபற்றிக், கருத்துவிளக்கந் தரவும், பகுத்தறிவுக் கொள்கைகளைப் பரப்பவும் தன்னாலான தொண்டுபுரிய, தோன்றிய ஏடாகும்.

“மன்றம்” விளம்பரம் என்னும் நீர்ப் பாய்ச்சப்பெற்று வளர்க்கப்பெறும் வகையைப் பெறவில்லை, சந்தாதாரர்களும், விற்பனையாளரும் காட்டும் ஆதரவு [illegible] பாய்ச்சப்பெற்றே செழிக்கச் செய்யப்பட வேண்டிய நிலையிலிருக்கிறது.

விற்பனையாளர்களில் விரல்விட்டு எண்ணக்கூடிய ஒருசிலரைத்தவிர, [illegible]யார் விற்பனைத்தொகையை உடனுக்குடன் அனுப்பிவைக்காமல், எம்[illegible] [illegible]ாற்றும்படி நடந்துகொள்வதை வருத்தத்துடன் சுட்டிக்காட்டவேண்டியிருக்கிறது. சிலர் விற்பனைத் தொகையை விழுங்கிவிட்டு, நாணயமற்றவர்களாக—அவமானச் சின்னங்களாக வாழ்கிறார்கள்; அத்தகையோர் ஆதரவாளர்களாலும், பொதுமக்களாலும், நாணயமான விற்பனையாளர்களாலும் வெறுக்கப்பட வேண்டியவர்கள். தொடர்ந்து நல்லுறவை நிலைநாட்டிவரும் விற்பனையாளர்கள் காலந்தாழ்த்தாமலும், தொகையை நிறுத்திவைத்துக்கொள்ளாமலும் உடனுக்குடன் பட்டியல் தொகையை அனுப்பிவைத்து உதவிபுரியவேண்டுகிறோம்.

“மன்றம்” வளர்ச்சியில் அக்கறையும் ஆதரவும் காட்டுவோர், ஆங்காங்கு மிகவான சந்தாதாரர்களைச் சேர்த்து அனுப்பிவைக்க முயற்சி எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறோம்.

பத்து சந்தாதாரர்களைச் சேர்த்து அனுப்பி வைப்பவர்க்கு, ஒரு சந்தா அன்பளிப்பாக வழங்கப்பெறும். “மன்றம்” விற்பனையாளர் இல்லாத இடங்களிலும், சிற்றூர்களிலும் இம்முறையில் சந்தாதாரர்களை நிரம்பச் சேர்த்து அனுப்பிவைக்குமாறு ஆதரவாளர்களை வேண்டிக்கொள்கிறோம்.

நிர்வாகி,
“மன்றம்”

“மன்றம்” விற்பனையாளர்கள் தேவை

கீழ்க்கண்ட ஊர்களில் மன்றம் இதழுக்கு முன்பணம் கட்டக்கூடிய விற்பனையாளர் தேவை.

- செங்கற்பட்டு
- காரைக்கால்
- விருதுநகர்
- கோவில்பட்டி
- சங்கரன்கோவில்
- சீர்காழி
- அம்பாசமுத்திரம்
- ஜோலார்ப்பேட்டை
- கோபிச்செட்டிப்பாளையம்
- திருவள்ளூர்
- ஏரல்
- அம்மையப்பன்
- பண்ருட்டி

மற்றும் விற்பனையாளர் இல்லாத ஊர்களிலும் விற்பனையாளர் தேவை.

விபரங்களுக்கு :

நிர்வாகி,
‘மன்றம்’
26, நைனியப்பன் தெரு, மண்ணடி,
சென்னை-1.

Edited, Printed and Published by V. R. NEDUNCHEZHIYAN M. A., at MANRAM ACHAKAM at 26, Nainiappan St, Mannadi, MADRAS-1